விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 12 வெள்ளிக்கிழமை (25.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

# படைக்குறைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை

## ஜனாதிபதி திட்டவட்டம்



(கொழும்பு)

வடக்கிலிருந்து படைக்குறைப்பு என்ற பேச்சுக்கு இனி இடமில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசியப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளை நேற்று வியாழக்கிழமை காலை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, டலஸ் அழகப்பெரும, ஜி.எல். பீரிஸ், கெஹலிய ரம்புக்வெல மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கில் புலிகளின் மீளெழுச்சி எனக் கூறப்படுவது, வடக்குக் கிழக்கில் படையினரை நிரந்தரமாக நிலைகொள்ளச் செய்வதற்கான கட்டுக்கதை என்று குற்றம் சுமத்தப்படுகின்றதே என ஜனாதிபதியிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இக்கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, வடக்குக் கிழக்கில்

20ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.- மன்னார் ஆயர்கள் தேசத்துரோகிகள்!

வடக்கே மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய கத்தோலிக்க மறை மாவட்டங்களின் ஆயர்கள் இலங்கை அரசுக்கு எதிராக தேசத்துரோக நடவடிக்கையில் ஈடுபடுவதாக கடும்போக்கு பௌத்த அமைப்பான பொது பல சேனா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த குற்றத்துக்காக மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோரைக் கைது செய்ய வேண்டும் என்று அந்த அமைப்பினர் பொலிஸாரி

20ஆம் பக்கம் பார்க்க....

## அசிட் அருந்திய குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் அசிட் அருந்திய இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இணுவில் பகுதியினைச் சேர்ந்த தெய்வேந்திரம் வசீகரன் (வயது-25) என்ற இளம்குடும்பஸ்தரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மனைவியான 16 வயதேயான இளம்குடும்பப்பெண்

20ஆம் பக்கம் பார்க்க....

## ராஜீவ் கொலை வழக்கில் இன்று பரபரப்புத் தீர்ப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், பேரறிவாளன், சாந்தன் உட்பட 7 பேரின் விடுதலை தொடர்பான மனு மீது இன்று தீர்ப்பு கூறப்படுகிறது.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு முடிவெடுத்தது. தமிழக அரசின் முடிவிற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் மனு செய்தது மத்திய அரசு.

இந்த் மனு மீதான விசாரணை முடிவடைந்து இன்று தீர்ப்பு கூறப்படுகிறது.

இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் இந்த தீர்ப்பை வழங்குகிறார். (எ-11)

## துணைவேந்தராக மீண்டும் பேரா. வசந்தி நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தராக மீண்டும் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பதவிக்கான தேர்தல் கடந்த மார்ச் 08-ம் திகதி நடைபெற்றது.

அதில் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் 24 வாக்குகளையும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குணசீலன் 16 வாக்குகளையும், யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட பேராசிரியர்

20ஆம் பக்கம் பார்க்க....

## வீதியில் சென்ற மாணவர்களிடம் விசாரணை நடத்திய இராணுவத்தினர்

### துண்டுப்பிரசுரங்கள் தொடர்பில்

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிறுவனமொன்றில் வகுப்பு முடிந்து மாணிப்பாய் வீதியினூடாக வீடுகளை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மாணவர்கள் சிலரை வழிமறித்துள்ள இராணுவத்தினர், அம்மாணவர்களிடம் துண்டுப்பிரசுரங்கள் வைத்துள்ளீர்களா என்று விசாரணை நடத்திய சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரே இவ்வாறு மாணவர்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர். இதற்கு பதிலளித்துள்ள மாணவர்கள், எம்மிடம் பாடக் கொப்பிகள் தான் இருக்கின்றன, பாருங்கள் என்று கூறியதை அடுத்து அம்மாணவர்களின் முதுகைத் தட்டி மன்னிப்புக் கேட்டு விட்டுச் சென்றுள்ளனர். யாழ்.

20ஆம் பக்கம் பார்க்க....

## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோரிப் பிரேரணை!

### வடக்கு மாகாண சபையில் முன்மொழிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வாழ் மக்களின் அமைதி நிலையைக் கருத்தில் கொண்டு பயங்கரவாதச் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் பிரேரணை ஒன்று ஆளும்தரப்பினால் கொண்டுவரப் படவுள்ளது. இந்தப்பிரேரணை ஆளும்கட்சி உறுப்பினர் எஸ். சிவமோகனால் முன்மொழியப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 8 ஆவது அமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆளும்கட்சி உறுப்பினர்களினால் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள அதே வேளை கடந்த அமர்வுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சரிடம் எழுத்து மூலம் உறுப்பினர்கள் எழுப்பியுள்ள கேள்விகளுக்கும் பதிலளிக்கப்படவுள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க....

Breaking News:
கனடா உங்களை அழைக்கிறது!
50க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்களுக்கு 25,000 வெற்றிடங்கள்
Express Entry Visa மூலம் IELTS இல்லாமலும் செல்லலாம்
கனடா தேசத்து CIC Agent மூலம் 100% உத்தரவாதமான சேவை
இன்று மட்டும்
வெறும் 30,000/- மட்டும் முதலில் செலுத்தி
UK, Australia, New Zealand, Switzerland
& ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் புதிய வாய்ப்பு
சிகரம் Sikaram Gateway to Education & Employment
TakeOff your dreams
கனவுகளுக்கு இறக்கை கட்டுவோம்
மேலதிக விபரங்களுக்கு:
www.sikaram.lk
முற்பதிவு: 077 36 16 798
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தரமடம், யாழ்ப்பாணம்

## பயங்கரவாத நடவடிக்கைக்காக வெளிநாடுகளிலிருந்து பணம்!

### இராஜதந்திரிகளுக்கு விளக்கியது அரசு



(கொழும்பு)

இலங்கையில் திட்டமிட்டு பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ள வெளிநாடுகளில் இருந்து கணிசமான தொகை பணம் அனுப்பி [illegible]

போதுமான ஆதாரங்கள் இருப்பதாக அரசாங்கம், வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் தெரிவித்துள்ளது.

அண்மைய வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், வங்கி மற்றும் ஏனைய வழிகளில் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதற்காக நிதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் அரசாங்கத்திடம் ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு தெளிவுப்படுத்தும் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் சார்பில் கலந்துகொண்ட மேஜர் ஜெனரல் கே.எச்.ஜீ. ஹெந்தவித்தாரணவின் உதவியுடன் அமைச்சர், வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தார்.

இலங்கையில் பயங்கரவா

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சுகவாழ்வுக்கான பயணம்

**இனப்பெருக்க பாலியல் சுகாதாரம் சார் ஒரு நாள் செயலமர்வு**

நோக்கம் :- இனப்பெருக்க பாலியல் சுகாதாரம் சார் பிரச்சினைகளை இனங்காணலும் அதற்கான தீர்வுகளை முன்வைத்தலும்.

இடம் :- சுகவாழ்வுக்கான பயண அலுவலகம்.

காலம் :- 03.05.2014 (ஞாயிறு 9.00 மணி முதல்)

பங்குபற்றக்கூடியவர்களின் எண்ணிக்கை :- 25

பங்குபற்றக்கூடியவர்கள் :-

- பல்கலைக்கழக மாணவ மாணவியர்.
- உயர் கல்வி நிறுவன மாணவ மாணவியர்.
- சித்த ஆயுர்வேத வைத்திய மாணவர்கள்.

பதிவுகளை மேற்கொள்ளும் இறுதித் திகதி :- 30.04.2014

மேலதிக தொடர்புகளுக்கு :- இணைப்பாளர்,
சுகவாழ்வுக்கான பயணம்,
3-ம் ஒழுங்கை, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் :- 021 221 7557

(ஜி-7147)



தந்தை செல்வா 37 ஆவது நினைவு நாள்
26.04.2014



## அஞ்சலியும் நினைவுரையும்

காலம்:- 26.04.2014 சனிக்கிழமை மு.ப 9.30 மணி.
இடம்:- தந்தை செல்வா நினைவிடம்
தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.
தலைவர்:- அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள்
(தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர்)
தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு

### நிகழ்ச்சிகள்

**தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்தலும் மலர் அஞ்சலி செலுத்தலும்**

வரவேற்புரை:- திரு.பெ.கனகசபாபதி அவர்கள்
தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு உறுப்பினர்
அஞ்சலியுரைகள்:- மௌலவி M.I மஹ்மூத் (பலாஹி)
அருட்தந்தை C.G ஜெயக்குமார் அடிகள்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
நினைவுப்பேருரை:- "தந்தை செல்வா இன்றிருந்தால்..."
விகடகவி மு.திருநாவுக்கரசு அவர்கள்
(ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி)
நன்றியுரை:- பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள்
செயலாளர், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு

**தமிழ் தேசியத்தின் தந்தை அவர்களை நினைவு கூரும் இந்த அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

தந்தை செல்வா
நினைவு அறங்காவற் குழு

(6214)


## பயங்கரவாத...

இதேவேளை 8 ஆவது அமர்வில் 7 உறுப்பினர்களினால் 11 பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது. இதில் இலங்கை வாழ் மக்களின் அமைதி நிலையைக் கருத்தில் கொண்டு பயங்கரவாதச் தடைச் சட்டத்தை நீக்குமாறு பாராளுமன்றத்தினைக் கோருதல்,

கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்பு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டபோதும் இரண்டாம் கட்டமாக 25 ஆயிரம் ரூபா பணம் இதுவரை பல குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே இந்த நிதியினை வழங்க மத்திய அரசைக் கோருதல்,

இதனைவிட வடக்கு மாகாணத்தில் நடைபெறும் மாகாணசபைக்குட்பட்ட திணைக்கள நிகழ்வுகளின் போது தேசிய கீதம் தமிழில் பாடப்பட வேண்டும் உள்ளிட்ட 11 பிரேரணைகள் உறுப்பினர்களினால் முன்மொழியப்பட்டுள்ளன. (எ-6)


விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com



## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி,
டாக்டர் எஸ். எஸ். சர்மா (குருஜி) சங்கானை,
முருகமூர்த்தி கோவிலடி.
T.P.0777064247

(6142)



ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் ஆங்கில பயிற்சி வகுப்புக்கள்

**Professional English Training Program at Angel International School**

**சர்வதேச உச்சரிப்புடன் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க**

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் அனுபவம் பெற்ற ஆசிரியர்களின் பயிற்சியில்...



## ANGEL INTERNATIONAL SCHOOL
### Manipay

நேர்முகப்பரீட்சை இன்று 25.04.2014 வெள்ளிக்கிழமையும்
நாளை 26.04.2014 சனிக்கிழமையும்
காலை 09.00 மணி முதல் மதியம் 12.00 வரை

E201 : SPOKEN ENGLISH
Ideal for Beginners

E301 : PROFESSIONAL ENGLISH
Ideal for employment and Higher Studies

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY
In God we trust

* An Oral Interview will be reqired for E201 & E301
* The Course is presented by qualified and experienced English teachers with both overseas and local experience
* Every course includes theory and application
* For those completing the courses a certificate will be offered.

Prefered A/L Qualifided | உயர்தரம் A/L தோற்றியவர்கள் விரும்பத்தக்கது

(C-7149)

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நிர்வாகி 021 225-5628



## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### கனகர் சிவசம்பு

எமது நிறுவனத்தில் ஆரம்பகாலத்தில் நிர்வாக சபை உறுப்பினராகவும், ஆலோசகராகவும், சிறந்த சேவையாளராகவும் இருந்து எமது நிறுவன வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட அமரர் கனகர் சிவசம்பு அவர்கள் 24.04.2014 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த செய்தியை கேள்வியுற்று எமது நிறுவனம் தமது இறுதி அஞ்சலியை செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தியாகி அறக்கொடை நிறுவனம்,
527, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
ஸ்தாபகர், பணிப்பாளர்,
பணியாளர்கள்.

(6224)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை, கவிதைப் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியாக நடத்தப்படுகின்ற கட்டுரை, கவிதைப் போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரப்படுவதாக இலங்கை இந்து சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நா. அருண்காந்த் தெரிவித்துள்ளார்.

இப் போட்டிக்கான கட்டுரைப் போட்டி விதிகளாக "சுவாமி விவேகாணந்தர் மதமாற்றம் தொடர்பாக ஆற்றிய உரைகளின் தொகுப்பு" எனும் தலைப்பில் 800 முதல் ஆயிரம் சொற்கள் வரையிலும் "கடந்த ஆயிரத்து 200 வருடங்களாக பாரதத்தில் இடம்பெற்ற இஸ்லாமியர்களின் படையெடுப்பின் போது இந்துக்கள் மீது நடைபெற்ற கொடூரங்களும் மனித வுரிமை மீறல்களும்" எனும் தலைப்பில் ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் வரையிலும் எழுதப்பட வேண்டும். "இந்துசமயத்தில் இருக்கின்ற அளவுக்கதிகமான சுதந்திரமும் ஜனநாயகத் தன்மைகளும் காரணமாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள்/ பின்னடைவுகள்" எனும் தலைப்பிலும் "ஆறுமுக நாவலரின் இந்து சமூக சமய பணி" எனும் தலைப்பிலும் 800 முதல் ஆயிரம் சொற்கள் வரையிலும் எழுதப்பட வேண்டும்.

"இந்துக்களை திட்டமிட்டு மத மற்றும் பண்பாட்டு அரசசார்பற்ற மற்றும் சமய நிறுவனங்களின் முயற்சியை முறியடித்தல்" எனும் தலைப்பில் 900 முதல் ஆயிரத்து 100 வரையான சொற்களிலும் எழுதப்பட வேண்டும்.

கவிதைப் போட்டிக்கான தலைப்புக்களாக, 'மதமாற்றம் எனும் தீ...', 'வீர சிவாஜி பிறந்திராவிட்டால்!', 'சாதியை விரட்டுவோம்!', 'ஆயிரம் ஆண்டு அடிமையாய் போன பாரதமே!', 'ஓ இந்துப் பெண்ணே!', 'ஏ... வீர விவேகானந்தா!' ஆகியன அனைத்தும் எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், என். அருள்காந்ஜீ, இல. 103/2 மகா வித்தியாலய மாவத்தை, கொழும்பு 13 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆக்கங்கள் அனைத்தும் ஏ4 அளவுடைய தாளில் கையெழுத்தாகவோ தட்டச்சு செய்தோ அனுப்பலாம்.

ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பி வைக்கலாம்.

கவிதைகளில் பிறமொழி சொற்களின் கலப்பு ஏற்றுக் கொள்ளப்படும்.

கவிதைகள் நான்கு வரிகளுக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

புதுக்கவிதை, மரபுக்கவிதை வடிவங்களிலும் எழுதலாம்.

ஹைகூ நடை சாரா கவிதையாய் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 077-4936 997 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் கேட்டுள்ளார். (2)

# 3 வெதுப்பகங்களிடம் தண்டப்பணம் அறவீடு

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழு வெதுப்பகங்களில் மூன்று வெதுப்பகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒவ்வொரு வெதுப்பகங்களுக்கும் மூவாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் நான்கு வெதுப்பகங்களுக்கு எதிராக தற்போது வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை பொறுப்பதிகாரி வசந்தசேகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் பாணின் நியம நிறை 450 கிராமாக இருக்கவேண்டும்.

ஆனால் யாழிலுள்ள வெதுப்பகங்களில் 410 தொடக்கம் 420 கிராமாகவுள்ளது.


இதுவொரு பாண் மோசடி எனவும் வெதுப்பகங்களில் பாணின் நிறை தொடர்பில் வெதுப்பக உரிமையாளர்கள் கூடிய கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவ்வாறு பாணின் நிறையில் ஏதும் குறைகள் காணப்படின் அந்த வெதுப்பகங்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-23)

# மாணவர்களுக்கு விருது வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி (ரன் கெகுலு) அனுசரணையுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் கே.எழில்வேந்தன், விருந்தினராக யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை வி.அன்பழகன் மற்றும் இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)



அமெரிக்க விஞ்ஞானி பேராசிரியர் சிவா சிவானந்தன் தென்மராட்சி சரஸ்வதி வித்தியாலயத்திற்கு வருகை தந்த போது சட்ட ஆய்வாளர் சோதிநாதன் மீளாய்வு செய்த ஆங்கில அமெரிக்க சட்ட தத்துவங்களை விஞ்ஞானி சிவா சிவானந்தனிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மானிடவியலும் சமூக விஞ்ஞானமும் பீடத்தினால் சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி, சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக யாழ். பிராந்திய நிலையடி உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப் பட்டக் (BA in Social Science) கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த (உ/த) இல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறியை (Certificate in Social Science) பூர்த்தி செய்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். இக் கற்கை நெறியானது மூன்று வருடங்களைக் கொண்டுள்ளது.

சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறிக்கு (Certificate in Social Science) 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்க முடியும்.

இளைஞர் அபிவிருத்தியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு (Diploma in Youth Development) விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த (உ/த) இல் 3 பாடங்களிலும் சித்தியடைந்த அனைவரும் விண்ணப்பிக்க முடியும்.

அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் (Ma in Development Studies and Public Policy) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன் அபிவிருத்தி துறையில் இரண்டு வருட சேவை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் அல்லது 155 ஆம் கட்டை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியிலமைந்துள்ள இக் கற்கை நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ஊதுவர்த்தி உற்பத்தி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் நடத்தப்படும் ஊதுபத்தி உற்பத்தி தொழில் நுட்ப பயிற்சி நெறி இன்று காலை 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிநெறிக்கு பதிவு செய்யப்பட்ட பயனாளிகளையும் இதில் பங்கு பெற விரும்பும் பயனாளிகளையும் குறித்த நேரத்திற்கு சமுகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# புகையிரதம் மோதியதில் ஊழியர் உயிரிழப்பு

புகையிரத கடவைக்குள் சிக்கி புகையிரத நிலைய ஊழியர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பளை இத்தாவில் புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதில் இத்தாவில் வாசியான தங்கராசா -சாந்தகுமார்(வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் கடந்த ஒரு மாத காலமாக குறித்த புகையிரத நிலையத்தில் இரவுநேர ஊழியராக கடமையாற்றி வந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று புகையிரத கடவைக்கு அருகில் கதிரையில் அமர்ந்து ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளார்.

எதிரே வந்த புகையிரதம் தட்டிச் சென்றுள்ளதால் புகையிரத கடவைக்குள் வீழ்ந்து நசியுண்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பளை பொலிஸார் சடலத்தினை மீட்டு பளை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (2-85)

# இன்றைய இராசி பலன்

25.04.2014

(சித்திரை 12, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

ஏகாதசி மாலை 5.47 மணிவரை

சதயம் பிற்பகல் 12.20 மணிவரை

இராகுகாலம் -10.30-12.00 மணிவரை

சுபநேரம் - 6.00-7.30 மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**இடபம்** சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சுப செய்திகள் வந்து சேரலாம், வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**மிதுனம்** வேலைச் சுமை குறையும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், பகை விலகி பாசம் கூடும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் கூடும்.

**சிம்மம்** இறைவழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கன்னி** தொழில் விருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், உடல்நலம் சீராகி உற்சாகப்படுவீர்கள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும், செல்வவளம் பெருக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம், அந்நியதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியால் பயணிப்போரிடம் வழிப்பறிப்பு கொள்ளை

## அச்சத்தில் பயணிக்கும் மக்கள்

நெல்லியடி சரசாலைப் பகுதியின் உப்பு வீதியில் இருந்து வல்லை வெளிப்பகுதி வரையான வீதியில் இனந்தெரியாத கொள்ளையர்கள் தொடர்ச்சியான வழிப்பறிப்பு கொள்ளைகளில் ஈடுபட்டு வருவதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த வீதியில் இரவுவேளை களில் மோட்டார் சைக்கிளில் வருபவர்களால் வேலை முடித்து வீட்டுக்கு செல்லும் பொதுமக்களிடம் மிரட்டல் மூலம் பணப்பறிப்பு இடம்பெறுகிறது.

இச்சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கோயில் பூசகர் ஒருவரை மிரட்டி பணத்தை பறித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் வந்த பொதுமகன் ஒருவரை கொள்ளையர்கள் இடைமறித்த வேளை குறித்த நபர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றதால் கொள்ளைச் சம்பவம் தவிர்க் கப்பட்டது

இதனால் இரவுவேளைகளில் மேற்படி வீதியினூடாக பொதுமக்கள் பயணிப்பதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இரவுவேளைகளில் அவ்வீதியில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டால் தமக்கு பாதுகாப்பாக இருக்குமென பொதுமக்கள் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். (2-60)




# ஊசல் கவிதை அறிமுக விழா

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் உள்ள ஞானாலயம் நிலையத்தின் ஊசல் எனும் கவிதைத் தொகுப்பு அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்நிலையத்தின் தலைவர் இ.சு.குலசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

தொடர்ந்து அறிமுக உரையினை மூத்த பத்திரிகையாளர் ராதேயன், விமர்சன உரையினை பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியின் தமிழ் ஆசிரியர் பரா.ரதீஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இந்நிகழ்வின் ஏற்புரையினை கவிதையின் ஆசிரியர் செல்வக்குமார் வழங்கவுள்ளார். (2-19)

# மலேரியாவை தோற்கடிப்போம் உலக மலேரியா தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய மலேரியா தடை இயக்கத்தினால் உலக மலேரியா தினம் வளமான எதிர்காலத்திற்கான முதலீடு மலேரியாவை தோற்கடிப்போம் எனும் தொனிப்பொருளில் இன்று அனுஷ்டிக்கப்படுமென யாழ்.பிராந்திய மலேரியா தடை இயக்க பிராந்திய வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன் அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் மலேரியா காணப்படும் நாடொன்றுக்குச் செல்வதற்கு முன்னர் மலேரியா தொற்றப்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கான தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவும்.

மலேரியா காணப்படும் நாடொன்றில் இருந்து வருகை தரும் போது மலேரியாவை இனங்கண்டு கொள்வதற்கான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.

காய்ச்சல் இருப்பின் மலேரியாவை இனங்காண்பதற்கான எளிமையான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.

நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்படைவதற்கு நுளம்பு எதிர்ப்பு (நுளம்புகளை விரட்டும் மருந்து) பூசப்பட்ட நுளம்பு வலைகளை பயன்படுத்திப் பழகிக் கொள்ளவும் போன்ற விடயங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. (2)

# கலந்துரையாடல்

(கரணவாய்)

கரவெட்டி கப்பூது நுணுப்பாளை காட்டுக்கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய நிர்வாக சபையினர் கலந்துரையாடலினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்கமைய குறித்த கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

எனவே மஹோற்சவ உபயகாரர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபையினர் கேட்டுள்ளனர். (2-60)




## தென்மராட்சி பிரதேசத்தில் இடியுடன் கூடிய பலத்த மழை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் இடியுடனும் காற்றுடனும் கூடிய பலத்த மழை நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளது.

கடந்த 21 ஆம் திகதி மீசாலை மேற்கு மாதர் சங்கத்தினால் மழை வேண்டி பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.


இதன்போது மீசாலை கரும்பு மாவடி முருகன் ஆலயத்தில் வர்ண பகவானுக்கு பொங்கலிட்டு அபிஷேகம் செய்தனர்.

இதனையடுத்து நேற்றைய தினம் பெய்த மழையினால் அப்பிரதேசம் குளிர்ச்சி பெற்றது. மழை பெய்ததால் அப்பிரதேச விவசாயிகள் தமது விவசாயத்தை கைவிட்ட நிலையில் நேற்றைய தினம் பெய்த மழையினையடுத்து மீண்டும் விவசாயத்தை தொடங்கியுள்ளனர்.

அத்துடன் பிரதேசத்தின் நீர் நிலைகள் வற்றியதால் கால்நடைகள் அருந்துவதற்கு நீர் இல்லாமல் அலைந்து திரிந்தன.

நேற்றைய தினம் பெய்த மழையினை அடுத்து நீர் நிலைகளில் நீர் வந்துள்ளமையால் விலங்குகள் தமது தாக்கத்தை தீத்து கொள்ளக்கூடியதை காணக்கூடியதாக இருந்தது. (2-29)

# பொதுநூலகத்திற்கு புகைப்பட பிரதி இயந்திரம் அன்பளிப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சிமன்ற பொது நூலகத்திற்கான புகைப்பட பிரதி இயந்திரம் ஒன்றினை ஐக்கிய இராச்சிய தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தினர் நேற்று முன்தினம் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இவ் இயந்திரத்தை சாவகச்சேரி நகராட்சி மன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை பெற்றுக் கொண்டார்.

இதன்போது தென்மராட்சிப்பகுதி பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் ஐக்கிய இராச்சிய செயலாளர் இ.ரவீந்திரன், நகராட்சிமன்ற பொதுநுலகர் வே.வித்தியானந்தன் மற்றும் தென்மராட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (2-29)

# அருளுரையும் விளக்கமும்

(யாழ்ப்பாணம்)

சிவபுராணம் எனும் கருப்பொருளிலான அருளுரையும் அது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் 7.30 மணிவரை நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் தைன்யா சுவாமிகளால் நடத்தப்படவுள்ளது. (2)

# தந்தை செல்வா நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 37 ஆவது நினைவு நாள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.தந்தை செல்வா சதுக்கத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு தலைவர் அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

தொடர்ந்து அஞ்சலியுரைகளை மௌலவி எம்.ஐ.மஹ்மூத், அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் அடிகள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரியள சுவாமிகள் ஆகியோர் ஆற்றுவார்கள்.

நினைவுப் பேருரையினை ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு தந்தை செல்வா இன்றிருந்தால்.... எனும் தொனிப்பொருளில் உரையாற்றவுள்ளார். (2)

# யாழ்.கம்பன் கழகம் நடத்திய பேச்சு கவிதைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் கம்பன் கழகத்தால் எதிர்வரும் ஜுன் மாதம் 13,14,15 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ள கம்பன் விழாவை முன்னிட்டு இடம்பெற்ற பேச்சு, கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களுக்கான பதக்கங்கள், பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன கம்பன்விழாவில்வைத்துவழங்கப்படும்.

**பேச்சுப்போட்டி-கீழ்ப்பிரிவு**

முதலாமிடம்- ம.மோகனதாரணி (மானிப்பாய் மகளிர்கல்லூரி), இரண்டாமிடம்- மதீஷா கானன் (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), மூன்றாமிடம்- ஜெ.ஆரபி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**பேச்சுப் போட்டி-மேற்பிரிவு**

முதலாமிடம்- பொ.கிருஷாந்த் (சங்கானை), இரண்டாமிடம்- கு.தயாளினி (ஊரமு), மூன்றாமிடம் செ.ஆண்டனியா (கச்சாய்)

**கவிதைப்போட்டி-கீழ்ப்பிரிவு**

முதலாமிடம்-தகுதியானவர்கள் இல்லை, இரண்டாமிடம்-தகுதியாதனவர்கள் இல்லை, மூன்றாமிடம்- ப.ஜெகநாதன்(யாழ்.மத்திய கல்லூரி)

**கவிதைப்போட்டி-மேற்பிரிவு**

முதலாமிடம்-தகுதியானவர்கள் இல்லை, இரண்டாமிடம்- ப.அம்பிகை(கோண்டாவில்), மூன்றாமிடம்- ர.குணேஸ்வரி (திருநெல்வேலி). (2)

# விநாயகர் பற்றிய ஊஞ்சல் பாட்டு

(பருத்தித்துறை)

வடமராட்சி அல்வாய் கிழக்கு பெருங்கலட்டி தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிதொடர்ந்துபத்துதினங்கள்நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகி அறிவித்துள்ளார்.

இதற்கமைய உற்சவத்தின் இறுதி நாளான எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வினைதீர்க்கும் விநாயகர் பற்றிய ஊஞ்சல்பாட்டு இடம்பெறவுள்ளதாகஅவர்மேலும்தெரிவித்துள்ளார். (2-10)

# இம்மாததேடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் அளவில்லா ஆற்றல் தரும் நேரான எண்ணங்கள் எனும் கருத்தில் யாழ். சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரதசைதன்ய சுவாமிகள் வழங்கும் இம்மாத தேடல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவ
# ஸ்வர்ண பந்தன ஸ்தாபித பிரதிஷ்டா மஹா



**பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பிரதம குருக்களின் ஆசிச் செய்தி**

உலகின் தாயாகவும் சுதுமலை அரசியாகவும் எங்கள் அனைவரினதும் அன்னையாகவும் சுதுகிரியில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கும் விநாயகாதி சண்டேஸ்வரியுள்ள பரிவார தேவதைகளுக்கும் வானளாவிய அழகிய இராஜகோபுரத்திற்கும் இன்று மிகவும் பக்தி சிரத்தையுடன் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதனையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை மஹா கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென சிவாகமங்கள் விதந்து கூறுகின்றன. எனவே இறைசாந்நியத்திற்காகவும் உலக சுபீட்சத்திற்கும் கிராம மக்களின் நலத்திற்கும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு கும்பாபிஷேக பிரதிபலன் எங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென ஸ்ரீ மாதா ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை அனுதினமும் வேண்டி ஆசிச் செய்தியை வழங்குகின்றேன்.

*ஸர்வே ஜனா சுகினோ பவந்து*
*எல்லா ஜீவராசிகளும் சுகமாக வாழட்டும்*

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள்,
அதிவந்தனீய சர்வதேச இந்துமத பீடாதிபதி



**அம்பாளின் அருள் கடாக்ஷம் அனைவருக்கும் கிட்டட்டும்.**

எங்கள் குல தெய்வம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் அழகிய இராஜகோபுரத்திற்கும் மிகவும் சிறப்பாக மஹா கும்பாபிஷேகம் நிகழும் தினத்தில் வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் சந்தோஷமடைகின்றேன்.

பல இலட்சம் ரூபா செலவில் அம்பாளின் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதிதாக எழுந்தருளி அம்பாளுக்குச் சபாமண்டபமும் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்வது மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

சுதுமலை வாழ் அம்பாளின் அடியவர்களினதும் வெளியூர் வாழ் சுதுமலை மக்களினதும் சுதுமலை கிராம மக்களினதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் பாராட்டத்தகுந்தவை. நாமெல்லோரும் ஒற்றுமையாகவும் அன்பாகவும் பண்பாகவும் பணிவாகவும் பக்தி சிரத்தையுடன் மென்மேலும் பல திருப்பணி வேலைகளை மேற்கொண்டு எங்கள் அம்பாளின் ஆலயத்தை முதன்நிலை ஆலயமாகக் கொண்டுவரச் செய்வது எல்லோரினதும் கடமையாகும். எங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாக்ஷம் கிட்டட்டும். எல்லோரும் ஆனந்தமாக வாழ்வோமாக. மங்களம் உண்டாகட்டும்.

வைத்தியகலாநிதி ஆ.சிவபாதம் தலைவர்,
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை சுதுமலை, மானிப்பாய்.



**ஆசிச் செய்தி**

ஈழத்தில் புகழ்பூத்த சுதுமலை அம்பாள் ஆலயத்தில் 12 வருடங்களுக்குப் பின்னர் புனருத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு அம்பாள் திருவருள் பாலித்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆலயம் என்பது ஒரு வழிபாட்டுத் தலம் மட்டுமன்றி ஓர் அறச்சாலையாக அடியவர்களுக்குப் பல்வேறு சமூகப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். காலத்துக்கேற்றவாறு நமது ஆலயங்களில் அறநெறிப்பாடசாலைகள், அன்னதான நிகழ்வுகள், ஆயுர்வேத வைத்தியப் பணிகள் போன்ற சமூகப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு அடியவர்களும் அவற்றில் ஈடுபடுவது சாலச் சிறந்ததாகும். அம்பாளின் ஆசியுடன் சுதுமலை அம்பாள் ஆலயத்தில் இதுபோன்ற திருப்பணிகள் நிகழ அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ரிஷி தொண்டுநாதன்
ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டம், பழம் வீதி, கோப்பாய்.



**வாழ்த்துச் செய்தி**

ஈழவளத் திருநாட்டின் வடபாலமைந்த சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ். நகரின் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களுள் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ் ஆலயத்தில் ஜய வருடம் சித்திரைத் திங்கள் 12 ஆம் நாள் (25.04.2014) அதாவது வெள்ளிக்கிழமையாகிய இன்று ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஐந்து தலங்களைக் கொண்ட அழகிய வானளாவிய இராஜகோபுரத்திற்கும் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றமை சிறப்பம்சமாகும்.பொதுவாக இந்து ஆகம விதி முறைகளுக்கு அமைவாக இந்து ஆலயங்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகா கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறுவது வழமையாகும்.


அவ்வகையில் இன்று இவ் ஆலயத்தில் நடைபெறும் இம் மஹா கும்பாபிஷேக நிகழ்வினை முன்னிட்டு வெளியிடப்படும் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அம்பாளின் அருளாசி அனைவருக்கும் கிடைப்பதற்கும் நாட்டில் அமைதி , சமாதானம் என்பன நிலவுவதற்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை பிரார்த்திப்போமாக.

சு.முரளிதரன், பிரதேச செயலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

**வாழ்த்துச் செய்தி**

யாழ்.குடாநாட்டின் வடபால் அமைந்துள்ள சுதுமலை என்னும் புண்ணிய பூமியிலே புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி ஆலயத்தினையும் முருகப்பெருமான் ஆலயத்தினையும் அருகிற்கொண்டு அடியவர்களுக்கு அருளாட்சியினை வழங்கி வருகின்றமை அற்புதமானது. மிகவும் பழைமைமிக் கதும் புதுமைகளை அடியவர்களுக்குச் செய்து இறைபக்தியையும் அன்பின் புனி தத்துவத்தையும் அள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் தாயானவளுக்கு இன்றைய ஜய வருட சித்திரைத் திங்களில் மகாகும்பாபிஷேக குடமுழுக்கை காண இருக்கும் அம்பாளின் இஷ்ட திஷ்டிகளை எம் அடியவர்களுக்கு வழங்கி நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைத்திருக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

திருமதி கி.மாலினி, கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய்.



**அன்பார்ந்த அம்பாள் அடியார்களே!**

சுதுமலைக் கிராமத்திலே வாழ்கின்ற மக்களை இடையறாது காப்பாற்றி சௌகரியமாக வாழ வைத்துக் கொண்டிருக்கும் நமது புவனேஸ்வரி அம்பாளின் சக்தியை எப்படி வர்ணிப்பதென்றே தெரியவில்லை. எமக்குத் தெரிந்த பலருடைய வாழ்க்கை அனுப வங்களை கேட்கும்போது அம்பாளின் கருணையை என்னவென்று விபரிப்பது. இந்தப் பூமியிலே எத்தனைமுறை விஞ்ஞானிகளும் வானசாஸ்திரிகளும் பூவுலகம் அழியப் போகிறது என ஊகம் தெரிவித்தும் இந்த பூமி இன்றும் நிலைத்து நின்று எத்தனை புதுவருடங்களைக் கொண்டாடி மகிழ்ந்திருக்க காப்பாற்றி இருக்கிறார். அதேபோலத்தான் புவனேஸ்வரி அம்பாள் எத்தனை பேரருளை புரிந்து சுதுமலை வாழ்மக்களை எந்தவித தீங்கும் வரவிடாது காப்பாற்றி இருக்கிறார். என்னால் அவரின் மகிமையை என்னவென்று சொல்வது.

தன்தாகம் தீர்ப்பதற்காக தங்கு சங்களையில் தங்கிய எமது புவனேஸ்வரி அம்பாள் ஆறு தலைமுறைகளுக்குமேல் முன்னோர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு இன்று 500 வருடங்களுக்கு மேலாகி

விட்டது. முதலில் ஒ…
ஆலமரத்தின்கீழ் …
ண்டமான ஆலய…
காரணமாக கோவி…
மாக நமது இளை…
வதை பார்க்கக் கூ…
கடந்த காலத்தில் க…
…டிய எங்க…
…மே.நாம் இந்த …
கிராமத்து மக்கள் …
உதவிகள் மட்டும…
மட்டுமல்ல வெளி…
இனிவரும் க…
ஒத்துழைப்பும் பங…
அம்பாளின் வ…

## கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்...


நாளுக்கு நாள் மாறும்
நவநாகரிக தங்க ஆபரணங்களை
எண்ணம் போல் தெரிவு செய்திட
**பிறேம் நகை மாடம்**
**171, பிறேம்பிளாசா,**
**யாழ்.வீதி, மானிப்பாய்.**

அனைத்து ஆடைத் திணிசுகளையும்
எண்ணம் போல் தெரிவு செய்திட
**விநாயகர் பட்டுச் சோலை**
**ஆலடிச் சந்தி,**
**மானிப்பாய்.**

**SELVA COMMUNICATION & MULTI SHOP**
குறைந்த கட்டணத்துடன்
Photo Copy, Printout, Scanning, Type Setting (Tamil and English), E-mail, Fax, Local Call, IDD Call (Net 2 Calls), Video Calls போன்ற சேவைகளையும், சகல விதமான பாடசாலை உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளலாம். யாழ்- கொழும்பு பஸ் ஆசனப்பதிவுகள் மேற்கொள்ளலாம். வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
SELVA COMMUNICATION & MULTI SHOP
Suthumalai Centre, Manipay.
Tel , Fax-021 225 5929, Hotline:- 0773405951

அம…
அம்பா…
டுகின்…
நடை…

**ஸ்ரீ சுபா பேக்கரி**
**சுதுமலை.**

**VSM ஸ்ரோர்ஸ்**
**ஆலடிச் சந்தி,**
**மானிப்பாய்.**

**அம்பாள் ஸ்ரோர்ஸ்,**
**அம்பாள் அரைக்கும் ஆலை,**
**அம்பாள் கோவிலடி,**
**சுதுமலை.**

P…
Printing
Photocopy (Colour/ Black & W…)
Binding
Laminatio…
Computer …
Net Call & …
Stationary …
Children …


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவறத்திற்கு ஒவ்வாத காரியங்களில் பிக்குகள்

## மல்வத்து பீடாதிபதி தெரிவிப்பு

நாட்டையும் இனத்தையும் பாதுகாக்கும் நோக்கிலேயே பௌத்த பிக்குகள், துறவறத்திற்கு ஒவ்வாத காரியங்களில் ஈடுபடுகின்றனர் என மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே சித்தார்த்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டையும், இனத்தையும், மதத்தையும் பாதுகாக்கும் எண்ணத்தில், பௌத்த பிக்குகள் பிக்கு கௌரவத்தை பேணாது செயற்படுகின்றனர்.

நாட்டில் இடம்பெறும் அநீதிகளை அரசாங்கம் உரிய முறையில் தட்டிக் கேட்பதில்லை. இதன் காரணமாகவே பௌத்த பிக்குகள் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்த வேண்டியேற்பட்டுள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள நிலைமைகள் குறித்து பொறுப்பு வாய்ந்தவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. நாட்டில் எத்தனை அமைச்சர்கள் இருந்தாலும், இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்த எவரும் முன்வருவதில்லை.

அரசாங்க அதிகாரிகள் என்று ஒரு தரப்பினர் இருக்கின்றார்கள், அவர்களும் அமைச்சர்களைப் போன்றே பிரச்சினைகளைக் கண்டு கொள்வதில்லை.

பௌத்த பிக்குகளின் நடத்தை குறித்து பலர் முறைப்பாடு செய்கின்றனர்.

அமைச்சர்கள், அரச அதிகாரிகள் உரிய முறையில் செயற்படாத காரணத்தினால் பௌத்த பிக்குகள், பிக்கு கௌரவத்தை புறந்தள்ளி போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என மல்வத்து பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட பிரதிநிதிகள், கண்டியில் மல்வத்து பீடாதியை சந்தித்திருந்தனர்.

இதன்போதே மல்வத்து பீடாதிபதி இவ்வாறான கருத்துக்களை முன்வைத்துள்ளார். (2)

# நாட்டின் அரசியல் சாசனத்திற்கு கசினோ சட்டம் முரணானது

## மாதுலுவே சோபித தேரர் தெரிவிப்பு

கசினோ சட்டம் நாட்டின் அரசியல் சாசனத்திற்கு முரணானது என கோட்டே ஸ்ரீ நாக விஹாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

1956 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயத்தை இரத்து செய்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதமர், அந்த இடத்தில் பல்கலைக் கழகமொன்றை அமைத்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.எனினும், இந்த அரசாங்கம் கசினோ சூதாட்டத்தை நாட்டில் வியாபிக்க முனைப்பு காட்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். கசினோ சூதாட்டம் பௌத்த கொள்கைகளுக்கு முரணானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதுபானம், போதைப் பொருள், சூதாட்டம் போன்றவற்றை தவிர்க்க வேண்டுமென பௌத்த தர்மம் வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.கசினோ சூதாட்ட நிலையங்களுக்கு அனுமதியளிக்க வேண்டாம் என மஹா சங்கத்தினரும், ஏனைய பௌத்த பிக்குகளும் ஏற்கனவே அரசாங்கத்திடம் கோரியுள்ள நிலையில், கசினோ தொடர்பான சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்ற முயற்சிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கசினோ சூதாட்டத்திற்கு அனுமதியளிக்கப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். கசினோ சட்டம் தொடர்பிலான சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் இரகசிய வாக்கெடுப்பு மூலமே சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென மாதுலுவே சோபித தேரர், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார். (2)

# பேஸ்புக் தொடர்பாக 500 முறைப்பாடுகள்

கடந்த சில மாதங்களில் மட்டும் பேஸ்புக் தொடர்பாக 500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி முறைப்பாடுகளில் 80 சதவீதமானவை போலி பேஸ்புக் கணக்குகள் என கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவின் பேச்சாளர் ரொசான் சந்திரகுப்த தெரிவித்தார்.

இது தவிர சட்ட விரோதமாக சில கணக்குகளுக்குள் பிரவேசித்தல், இக்கணக்குகள் ஊடாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற பல முறைப்பாடுகள் பதிவாகி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே போலி கணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து ஒரு வார காலத்தில் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது. (2)







வடமாகாண கல்வியமைச்சின் கல்வி மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்றைய தினம் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்றபோது... (படங்கள் :- என்.குமார்)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 100 |
| தக்காளி | 40 | 40 | 30 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 | 30 | 40 |
| கோவா | 30 | 20 | 25 | 40 |
| கரட் | 100 | 80 | 60 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 50 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 90 - 100 | 80 - 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 45 | 60 |
| பயற்றங்காய் | 30 | 60 | 50 | 50 |
| லீக்ஸ் | 70 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 50 | 70 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 20 - 50 | 80 | 80 | 100 |
| போஞ்சி | - | 140 | - | 140 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 25 | - |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 - 100 | 120 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 - 50 | 40 | 40 | 30 - 40 |
| இராசவள்ளி | 70 | 110 | 100 | 80 |

# பொதுபலசேனாவின் அத்துமீறல் அடாவடித்தனத்தின் உச்சக்கட்டம்

## சட்டரீதியாக அணுகுவோம் என்கிறார் அமை.ரிசாத்

பொதுபலசேனா அமைப்பினர் அமைச்சிற்குள் அத்துமீறி நுழைந்தமையானது அடாவடித்தனத்தின் உச்சகட்டமாகும். இதனை சட்டரீதியாக அணுகுவோம் என அமைச்சர் ரிஷாட் பதியுதின் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா அமைப்பினர் நேற்று முன்தினம் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிற்குள் அத்துமீறி நுழைந்து தேடுதல் நடத்தியதையடுத்து அமைச்சிற்கு வருகைதந்திருந்த அமைச்சர் ரிஷாட் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சிற்குள் நேற்று முன்தினம் அனுமதியின்றி நுழைந்த பொதுபலசேனா அமைச்சினர் யாரோவொரு தேரர் இங்கிருப்பதாக தேடுதல்களை நடத்தியுள்ளனர்.

இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவ்வமைப்பினர் தேடும் நபர் இங்கில்லை. எனினும் இதுவொரு அரச கட்டடம். அனுமதியில்லாமல் அத்துமீறி இதற்குள் நுழைந்து தேடுதல் நடத்துவதற்கு அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இதற்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

என்னை அகௌரவப்படுத்துவதற்காக இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். தனிப்பட்ட முறையில் என்னை அகௌரவப்படுத்தினால் அதனை நான் ஏற்றுக்கொள்வேன். இருப்பினும் இது பொதுவான இடம். மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இங்கு எந்நேரத்திலும் வருகை தருகின்றனர். அதற்கு இடையூறு அளிப்பதானது அடாவடித்தனத்தின் உச்ச கட்டமாகும்.

இவ்வாறு அமைச்சிற்குள் அத்துமீறி நுழைவானதானது நாட்டிற்கும் குறித்த அமைப்பிற்கும் நல்லதல்ல. இத்துடன் இத்தகைய எதேச்சதிகாரமான செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஆசிரிய பயிற்சி கலாசாலையை மூட வேண்டிய தேவை கிடையாது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் உள்ள எந்த வொரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையையும் மூட வேண்டிய தேவையோ அவசியமோ கிடையாது. இந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூலம் தற்போது தட்டுப்பாடாகக் காணப்படும் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு பாடசாலைகளில் இணைத்துக்கொள்ள முடியுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வட மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வட மாகாண கல்வி முறையிலான மீளாய்வும் கல்வி ஆலோசனை செயலமர்வும் நேற்று முன்தினம் முற்பகல் 9 மணியளவில் பலாலி வீதியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராசா தலைமையில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களை நியமனம் செய்ய ஆசிரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் அறுநூறு பேரே உரிய பதவிகளை பெற்றுள்ளார்கள்.

தற்போதும் கூட நானூறு வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதற்கு காரணம், தகுதியானவர்கள் இன்மையேயாகும். இதேபோன்று, ஆயிரம் ஆங்கில பாடத்தற்கான ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் நூறு பேர் மட்டுமே பதவிகளை பெற்றுள்ளார்கள். ஏனைய தொளாயிரம் பேருக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் தகுதியானவர்கள் இன்மையால் வழங்க முடியாத நிலைமீம காணப்படுகின்றது.

சுகாதார அமைச்சினால் க. பொ. த. உயர்தரத்தில் சித்திபெற்ற பத்தாயிரம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் விஞ்ஞானம் படித்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் ஆறாயிரம் பேர் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்பியுள்ளார்கள்.

குறிப்பாக இலங்கையில் ஆங்கிலம், விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பத் துறைகளில் பாரிய வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார். (2)

# வெளிநாட்டு பொதிகள் குறித்து விசாரணை

வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பை தபால் திணைக்களம் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளது.

தபால்மூலம்சட்டவிரோத பொருட்கள் அனுப்பப்படுவது கடந்த காலங்களில் அதிகரித்துள்ளதாக தபால் மா அதிபர் ரோஹன அபேவர்த்தன தெரிவித்தார். புகைத்தல் பொருள், திரவியங்களை தபால் மூலம் அனுப்பும் முறையொனறு கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போலி முகவரிகளை பயன்படுத்தி இவ்வாறு பொருட்கள் அனுப்பி வைக்கப்படுவதாக அவா குறிப்பிட்டாா். (2)

# ஆட்சிப்பொறுப்பு கைமாறினால் நாடு சர்வாதிகாரம் நோக்கி நகரும்

## அமைச்சர் விதாரண தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றுமாறு சோசலிச கட்சிகள் கோரிக்கை விடுக்கவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் சோசலிச கட்சிகள் கூட்டாக இணைந்து கோரிக்கை விடுக்கவுள்ளன.

2005 ஆம் ஆண்டு மஹிந்த சிந்தனை தேர்தல் வாக்குறுதிகளில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும், இதுவரையில் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சோசலிச கட்சிகளினால் நடத்தப்பட உள்ள மே தினக் கூட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்

இந்த அரசாங்கத்தை பதவி கவிழ்க்க உள்நாட்டு வெளிநாட்டு ரீதியில் சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஏதேனும் ஓர் காரணத்தினால் ஆட்சிப் பொறுப்பு வேறு தரப்பிடம் கை மாறினால் நாடு சர்வாதிகார ஆட்சி முறைமையை நோக்கி நகரும்.

அமைச்சர்கள் என்ற ரீதியில் நிறைவேற்று அதிகார ஜனாதிப்தி முறைமையை இரத்து செய்யுமாறு ஏற்கனவே கோரியுள்ளோம்.

நாடாளுமன்றிற்கு பொறுப்பு கூறக்கூடிய ஓர் பிரதமரின் தலைமையிலான ஆட்சியொனறை உருவாக்குவதே மிகவும் பொருத்தமானதாக அமையும் என திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (2)

# பிரித்தானிய பிரஜைகளின் பயண அறிவுறுத்தல்களில் திருத்தங்கள்

இலங்கைக்கு பயணம்செய்வது குறித்து தமது நாட்டு பிரஜைகளுக்கான பயண அறிவுறுத்தல்களில மீண்டும் பிரித்தானியா திருத்தங்களை செய்துள்ளது.

உள்நாட்டு சட்டங்களுக்கு அமைவாக இந்த அறிவுறுத்தல்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

புத்தரின் உருவத்தைக் கொண்ட பச்சைகளை உடலில் குத்திக் கொண்டவர்கள் பயணம் செய்வது குறித்து இவ்வாறு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

பௌத்த மதச் சின்னங்கள் மற்றும் உருவங்கள இழிவுபடுத்தப்படுகின்றமை பாரிய குற்றச் செயலாகக் கருதப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இந்தச் சட்ட திட்டங்களை கருத்திற் கொண்டே, பிரித்தானிய பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சிலைகளுக்கு அருகாமையில் புகைப்படங்களை எடுக்கக கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது. நேற்று வெளியிடப்பட்ட பிரித்தானிய வெளியுறவு அமைச்சின் மீள்சேர்க்கப்பட்ட சுற்றுலா அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் 37 வயதான பிரித்தானிய பெண் ஒருவர் கைபுஜத்தில் புத்த பெருமானின் உருவத்தை பொறித்திருத்தமையை அடுத்து கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படவிருக்கிறார்.

இதனையடுத்தே பிரித்தானிய வெளியுறவு அமைச்சு மேற்குறித்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது. (2)


## Faculty of Management Studies and Commerce, University Of Jaffna.

### Notice

The Orientation Programme for the newly admitted first year students to the Faculty of Mangement Studies and Commerce, University of Jaffna for the academic year 2012/ 2013 will be held from 05th of May 2014 till 09th May 2014 at 09.00 a.m. The new students are requested to participate in the orientation programme with out fail.

Academic activities for all students (1st, 2nd, 3rd 3rd and 4th year students) of the Faculty of Management Studies and Commerce will commence on 19th May 2014.

Registrar. (சி-7146)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை கலைப்பீடம்

### கலைப்பீடப் பரீட்சைகள் 2012 - இரண்டாம் அரையாண்டு (பழைய பாடத்திட்டம்)

கலைமாணிப் பட்டக் கற்கை நெறியைப் பழைய பாடத்திட்டத்திற் பயின்று பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய மீள் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கலை முதற்தேர்வு, இரண்டாம் அரையாண்டு- 2012
2. இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்-2012
3. மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்- 2012

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களை கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை (05.05.2014 ஆம் திகதிக்கு முன்னராக பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

பதிவாளர். (சி-7146)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 14.75 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/3007 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 48 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/3011 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 11.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / ஹாட்வெயர், கட்டட ஒப்பந்தகாரர்<br>தொ.இ: B/3008 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 63.75 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: சட்ட மாணவி<br>தொ.இ: G/3014 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 29.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Software Engineer / Project Manager (டுபாய்)<br>தொ.இ: B/3012 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 51.25 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, BA – Following / ஆசிரியர்<br>தொ.இ: G/3015 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 42.75 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L, மின்னிணைப்பு / காப்புறுதி முகவர்<br>தொ.இ: B/3013 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்:, ரேவதி 2<br>கி.பா: 12 .25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L / தனியார் கடை<br>தொ.இ: G/3016 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( [illegible] )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு சார்பான ஆட்சியை ஏற்படுத்த ஜே.வி.பி.போராடுகிறது

## லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இன்றைய சர்வாதிகார அரசாங்கத்தை விரட்டியடித்து விட்டு மக்களின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தவே ஜே.வி.பி போராடி வருவதாக அந்தக் கட்சியின் மேல் மாகாண சபையின் குழுத் தலைவர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜே.வி.பியின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றம் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் தாக்கம் செலுத்தியது.

அரசாங்கத்திற்கும் கிடைக்கும் வாக்குகளை குறைக்க முடிந்ததுடன் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் குறைக்க முடிந்தது.

ஜே.வி.பியின் வாக்குகள் அதிகரித்துள்ளன. ஜே.வி.பியின் இலக்கை வாக்காளர்கள் முழுமைப்படுத்தி கொடுத்தனர்.

நாட்டின் இன்றைய சர்வாதிகார ஆட்சியாளர்களை விரட்டிவிட்டு, மக்களுக்கு சார்பான ஆட்சியை ஏற்படுத்துவதற்காகவே ஜே.வி.பி போராடி வருகிறது.

வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சக்திகளுடன் எமக்கு போட்டியில்லை. வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலின் பின்னர், சரத் பொன்சேகாவை மூன்றாவது சக்தியாக சிலர் வர்ணித்தனர்.

ஆனால் ஜே.வி.பியே நாட்டில் இருக்கும் மாற்று அரசியல் கட்சியாகும் எனவும் அவர் கூறியுள்ளார். (2)

# தென்னாபிரிக்காவின் உதவியை அரசாங்கம் நாடுவது தவறானது

## தேசப்பற்றுடைய தேசிய இயக்கம் தெரிவிப்பு

அரசாங்கம் நாட்டை காக்கா விட்டால் அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

விஜயராம மாவத்தையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண தென்னாபிரிக்காவின் உதவியை நாடுவது தவறானது. அரசாங்கம் இரவில் விழுந்த குழியில் பகலிலும் விழ முயற்சிக்கின்றது.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகத்திற்கு அவசியமில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் தென்னாபிரிக்காவை மத்தியஸ்தம் வகிக்க அழைக்கக் கூடாது.

நாட்டில் நிலவி வரும் அபாயகரமான நிலைமை பற்றி அரச ஊடகங்கள் சரியான தகவல்களை வெளியிடுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)


## முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம்
## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமாக் கற்கை நெறிக்கான மூன்றாம் அரையாண்டுப் பரீட்சை-மே 2014**

மேற்படி கற்கை நெறிக்கான பரீட்சைகள் 2014 மே மாதம் 10,11, 17,18 ஆம் திகதிகளில் நடைபெறும் என பீடாதிபதி அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்று 30.04.2014 இற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

திட்ட அறிக்கை (Project Report) யினை 16.05.2014 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைகள் கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர சூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

பதிவாளர். (சி-7146)

## முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம்
## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**நுண்நிதியியல் டிப்ளோமாக் கற்கைநெறிக்கான மூன்றாம் அரையாண்டுப் பரீட்சை- மே 2014**

மேற்படி கற்கை நெறிக்கான பரீட்சைகள் 2014 மே மாதம் 17,18, 24,25 ஆம் திகதிகளில் நடைபெறும் என பீடாதிபதி அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்று 30.04.2014 இற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

திட்ட அறிக்கை (Project Report) யினை 23.05.2014 இற்கு முன்னர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பரீட்சைகள் கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர சூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

பதிவாளர். (சி-7146)


# மணல் விநியோகம் வழமைக்கு திரும்பியது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக தடைப்பட்டிருந்த மணல் விநியோகம் தற்பொழுது வழமைக்கு திரும்பியுள்ளது. மணல் அகழும் பிரதே சத்தினை அம்பன் பகுதியிலிருந்து புதிய பிரதேசமான நாகர் கோவில் காட்டு பிரதேசத்திற்கு மாற்றுவதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் யாழ். குடா நாட்டிற்குரிய மணல் விநியோகம் முற்றாக தடைப்பட்டிருந்தது. இதனால் யாழ்.குடா நாட்டின் பல்வேறுபட்ட அபிவிருத்தித்திட்டங்கள் தடைப்பட்டிருந்தது.

தற்பொழுது மணல் விநியோகம் சீர்படுத்தப்பட்டுள்ளதனால் வழமைபோல் மகேஸ்வரி நிதியத்தில் பதிவினை மேற்கொண்டு உடனடியாக மணலினை பெற்றுக்கொள்ள முடியும் என மகேஸ்வரி நிதிய இணைப்பாளர் த.றஜீவ் அறிவித்துள்ளார். (2)

## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(08.04.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நேசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பெர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரேக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➢ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி. அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(சி-7145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...மலைமுகட்டில் துருத்திக் கொண்டு நிற்கும் பெரிய பாறை ஒன்று கீழே விழுந்து விடாமலிருப்பதற்காக ஒரு சிறு பாறையை முட்டுக் கொடுத்து இருப்பதுபோலக் காணப்படும் பெரிய பாறை திட்டு. இதுதான் கோரக்கர் ஏடு எழுதின இடம்.

காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் மெதுவாக அடியெடுத்து வைத்தோம். பாறைக்குக் கீழே செங்குத்தான பள்ளத்தாக்கு. சிறிது தவறினாலும் அபாய சங்குதான். ஜாக்கிரதையாக நின்று, உட்கார்ந்து காற்றின் சுகத்தை அனுபவித்தோம். இந்த மாதிரி காற்று வீசும் பாறையில் அமர்ந்தால் படைப்பிலக்கியமல்லவா உருவாகும் கோரக்கருக்கு. எப்படி தத்துவ ஞானக் கருத்துக்கள் உதயமாயின? ஆச்சரியமாக இருந்தது.


காற்றின் சுகத்தில் எங்களையே நாங்கள் மறந்து அமர்ந்திருந்த போதுதான் அந்தத் தகவலைச் சொன்னார் துறவி.

இந்தப் பாறைக்குக் கீழே இருக்கும் குகைக்கு ஏடு எழுத்தாணி மண்டபம் என்பது பெயராம். அதன் பின்னால் ஒரு சிறு பாறை இடுக்கின் துவாரத்தின் வழியே உள்ளே பார்த்தால் ஒரே கும்மிருட்டாக இருக்குமாம்.

ஒரு டார்ச் விளக்கின் ஒளியில் அந்த துவாரத்தின் வழியே பார்த்தால் உள்ளே மேடை மீது ஓர் ஏடும் எழுத்தாணியும் காணப்படுமாம்.

சித்தர்கள் இங்கு வந்து தவம் செய்துவிட்டுச் செல்வார்களாம். ரொம்ப வருஷத்துக்கு முன்னாடி கீழே சென்று அதனைப் பார்த்ததாகத் துறவி கூறினார்.

எங்களுக்கும் அதனைப் பார்க்க ஆசையாயிருப்பதாகக் கூறவே, நாகராஜோ அது சாத்தியமில்லை என்று கூறினார்.



நவக்கிரகக் கற்கள்

காரணம் கீழே ரொம்ப தூரம் செல்ல வேண்டும். அடிவாரத்துக்குச் செல்ல சரியான பாதை இல்லை. சரி சிரமம் பார்க்காமல் இறங்கலாம் என்றால் அங்கு கரடிகள் அதிகம் வசிக்கின்றன. அதனால் சிரமப்பட்டு சென்றாலும் கரடிகள் தங்குமிடமாகத்தான் அது இருக்கும் என்று தெரிவிக்கவே, மனதில் எழுந்த ஆசையை அடக்கிக் கொண்டு கீழே இறங்க ஆரம்பித்தோம்.

இப்பொழுது புதியதாக ஒரு சந்தேகம்.

என்ன?

"ஏடு எழுத்தாணி மண்டபத்தின் நடுவில் உள்ள சின்ன இடுக்கு வழியே சித்தர்கள் எப்படி உள்ளே சென்று தவம் செய்துவிட்டு வெளியே வருவார்கள்?"

"ம்... இது என்ன பிரமாதம். சித்தர்கள் நினைத்தால் எதனுள்ளும் சென்று வருவார்கள். சில வருஷத்துக்கு முன் நடந்த சம்பவம் ஒன்றைச் சொல்கிறேன் கேளுங்கள்.

அப்பவெல்லாம் மகாலிங்கத்தைச்

**ஆன்மீகம் 102**

தரிசனம் செய்ய இவ்வளவு கும்பல் வராது. அமாவாசை, பௌர்ணமி என்றால் ஒரு பத்து இருபது பேர் மட்டுமே வருவார்களாம். ஒவ்வொருவராக வந்து தாணிப்பாறையில் ஒன்றாகச் சேர்ந்த பின்னர், ஒன்றாக மலை ஏறுவார்களாம்.

ஓர் அமாவாசையன்று இந்த மலை ஏறும் குழுவுடன் புதியதாக ஒரு பக்தரும் சேர்ந்து கொண்டார். மகிழ்ச்சியுடன் தங்கள் குழுவுடன் இணைத்துக் கொண்டு மலை ஏறத் தொடங்கினார்கள்.

பிலாவடி கருப்பர் சன்னதியருகே வரும்போது திடீரென மழை பிடித்துக் கொண்டது. மழைக்கு ஒதுங்காமல் அவரவர் விடுவிடுவென்று மேலே செல்லத் தொடங்கி விட்டனர்.

புதியதாக வந்த பக்தருக்கு மலை ஏறிப் பழக்கமில்லாததால் வேகமாக நடக்க முடியவில்லை. மழைக்காக முன்னே சென்றுவிட்ட அவர்களுடன் செல்லாமல் தனியே பின்தங்கி விட்டார்.


குறுக்கே காலியாகக் கிடந்த நடைபாதையில் மழைநீரும் அருவி நீரும் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

ஒருவழியாகச் சமாளித்துக் கொண்டு கரையேறிய புதிய பக்தர் வழி தெரியாமல் திகைத்து நின்றார்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**21**

ஓ! அந்த நண்பர்கள்! திரைகடலோடித் திரவியம் தேடப் போனவர்கள்.

சுடுகின்ற அரபிக் கடற்கரையில் நின்றுகொண்டு என் தாய் சௌக்கியமா? என் தந்தை சௌக்கியமா என் மனைவி மக்கள் சுகமா? என்று காற்றிடம் நலம் விசாரித்துக் கொண்டிருப்பவர்கள்.

என் ஒரு கண்ணில் ஆனந்தக் கண்ணீரையும் ஒரு கண்ணில் துக்கக் கண்ணீரையும் வழிய வழியப் பொழிய வைத்தவர்கள்.

என்னைக் கட்டிக் கொண்டவர்கள் சிலர்;

கன்னம் வருடியவர்கள் சிலர்;

உள்ளங்கையில் ஆட்டோகிராஃப் வாங்கியவர்கள் சிலர்;

உச்சந் தலையில் முத்தமிட்டவர்கள் சிலர்.

எனக்குத் தெரியும்- அந்த அன்பு மேலோட்டமானதில்லை.

அந்த அன்பும் அரவணைப்பும் வெறும் சினிமா சில்மிஷங்களில்லை.

எல்லாம் கவிதாநேசம்- இலக்கியப் பாசம். தங்களின் இதயத் துடிப்புகளைப் பிரதிபலிக்கிறவன் இவன் என்ற பிரியம்.

இவன் வானத்திலிருந்து வந்தவனில்லை; வாழ்க்கையிலிருந்து வந்தவன் என்பதை விளங்கிக் கொண்ட வெளிப்பாடு.

என் இனிய தோழர்களே!

என் இதயத்தின் ஒவ்வோர் அணுவையும் பிய்த்துப் பிய்த்துக் கூறு போட்டுக்கொண்ட பிரியவான்களே!

என்ன நான் செய்துவிட்டேன் உங்களுக்கு?

ஏன் இந்தப் பாசம்? ஏன் இந்த நேசம்?

உங்கள் ஒவ்வொரு சிறகுக்குள்ளும் என்னை அடைகாத்தல்லவா அனுப்பினீர்கள்!

கடல்நீரைக் குடிநீராய் மாற்ற மட்டும்தான் தெரியும் அந்த அரபு அரசுக்கு;

ஆனால் கண்ணீரைப் பன்னீராய் மாற்ற தெரியும் உங்கள் அன்பு மனசுக்கு.

என்னிடம் நீங்கள் நேசிக்கும் அம்சங்கள் இரண்டோ மூன்றோ இருக்கலாம்.

ஆனால் உங்களிடம் நான் நேசிக்கும் அம்சங்களை விரல்விட்டு எண்ணத் தொடங்கினால் எனக்குக் கால் விரல்களும் கைவிரல்களாயிருக்க வேண்டும்.

வேலை கிடைக்கவில்லை என்ற வேதனையில் தாடியையும் சோகத்தையும் சரிவிகிதத்தில் வளர்த்துக் கொண்டு வாழ்க்கை[illegible] மல் ஏதோ [illegible] படத்தில்கூட பார்த்திராத அந்த இடத்துக்குப் புறப்பட்டீர்களே! அந்த நம்பிக்கை-

இறகு கருகிவிடுமென்று அஞ்சி, பருந்து கூடப் பறந்து போக அஞ்சும் அந்தப் பாலைவெளிகளில் கண்களை விரிய வைக்கும் கான்கிரீட்சோலைகளை நிர்மாணித்தீர்களே! அந்த உழைப்பு-

மொழிகூட மழை என்ற வார்த்தையை





எப்போதோ ஒருமுறை பயன்படுத்தும் அந்த வறண்ட பிரதேசத்தில் புல்வெளிகளையும் பூச்செடிகளையும் நட்டு வைத்து நட்டு வைத்து நந்தவனம் வளர்த்தீர்களே! அந்த உழைப்பு-

தபாலில் மட்டுமே தாம்பத்யம், கனவுகளில் மட்டுமே பாசம் என்ற நிலையி[illegible]ளைக் காத்துக் கொள்வதற் [illegible] நீங்கள் விதித்துக்கொண்டிருக்கிற கட்டுப்பாடு இவைபோன்ற எத்தனையோ காரணங்கள் உங்கள்மீது என் இதயத்தில் இரக்கத்தையும் மதிப்பையும் சுரக்க வைத்திருக்கின்றன.

மனிதன் போர்க்களத்தில் செலவழிக்கிற நாட்களும், பொருள் தேடச் செலவழிக்கிற நாட்களும் குறைகிற போதுதான் மனித குலத்தின் நாகரிகம் முழுமையை நோக்கி முன்னேறுமென்பது என் எண்ணம்.

பொருள் என்பது வாழ்க்கையைக் கொண்டாடுகின்ற கருவியாக இருக்க வேண்டுமே தவிர வாழ்க்கையைத் துண்டாடுகின்ற கருவியாக இருக்கக் கூடாது.

ஆனால் பொருள் தேடுவதற்காக வாழ்க்கையில் பாதியை இழந்து போகிற அவலம் உலக மனிதனின் பிரச்சினையாக இந்த நிமிடம் வரை இருக்கிறது.

இன்று அரபு நாடுகளில் பொருள் தேடும் நம் அன்புத் தமிழர்களும் அதே பிரச்சினைக்குத்தான் ஆளாகியிருக்கிறார்கள்.

மனைவி இக்கரையில்; கணவன் அக்கரையில்.

குழந்தைக்குத் தாய் கணவனின் படத்தைத்தான் காட்டிக் கொண்டிருக்க வேண்டும் அவன் வரும் வரையில்...

-வைரமுத்து- (தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆட்டுக்கார ஆண்டியப்பன்

ஆண்டியப்பனின் பெற்றோர் அவன் சிறுவனாக இருக்கும் போதே இறந்துவிட்டனர்.

அநாதையான ஆண்டியப்பனை,



அவனுடைய தந்தையின் நண்பர் ஒருவர் புகலிடம் தந்து வளர்த்தார்.

வளர்ந்து பெரியவனான பின், அவன் தன் வாழ்க்கைக்கு வழி தேடும் வண்ணம் சிறிது பண உதவியும் செய்தார்.

ஆண்டியப்பன் தனக்கென ஒரு குடிசை அமைத்துக்கொண்டு, மிஞ்சிய பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்கினான்.

தன் குடிசையைச் சுற்றியிருந்த புல்வெளியில் அவற்றை மேயவிட்டு வளர்த்தான். அவை வளர்ந்த பின் அவற்றை விற்று, கிடைத்த பணத்தில் நான்கு ஆடுகள் வாங்கினான்.

இவ்வாறு ஆடுகள் வாங்கி, வளர்த்து, அவற்றை விற்று நல்ல லாபம் சம்பாதித்தான். ஓரளவு பண வசதி ஏற்பட்டதும், அந்த கிராமத்தில் வசித்த ஏழைப்பெண் லட்சுமியை மணம் புரிந்தான்.

அந்த கிராமத்தில் அவனுக்கு ஆட்டுக்கார ஆண்டியப்பன் என்ற பெயரே ஏற்பட்டு விட்டது.

ஆனால் லட்சுமிக்கு தனது கணவன் செய்யும் தொழில் பிடிக்க வில்லை.

பல முறைகள் அவள் தன் கருத்தைத் தெரிவித்தும், ஆண்டியப்பன், தொழிலை மாற்ற முடியாது என்று மறுத்து விட்டான்.

ஆண்டியப்பனிடம் இருந்த ஆட்டுக் குட்டிகளில் ஒன்றுக்கு ஒரு கண் இல்லை. பரிதாபத்துடன் லட்சுமி அதற்கு "ராமு" என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்த்தாள்.

ஒருநாள் ஆண்டியப்பன் பல ஆடுகளை ஓட்டிக் கொண்டு நகரம் சென்று மாலை வீடு திரும்பினான். அவனுக்கு உணவு பரிமாறியபடி, "அவ்வளவு ஆடுகளையும் விற்று விட்டாயா?" என்று லட்சுமி கேட்க, அவன், "ஆமாம்! ஒரு கசாப்புக் கடையில் விற்றுவிட்டேன்!" என்று பதிலளித்தான்.

"நம் பிள்ளைகளைப் போல் வளர்த்த ஆடுகளை கசாப்புக் கடைக்கு விற்க உனக்கு எப்படி மனம் வந்தது?" என்று லட்சுமி கேட்டதும், ஆண்டியப்பன் கோபத்துடன், "மூன்று வேளை நாம் சாப்பிடவேண்டும் என்றால் அதையெல்லாம் பார்க்க முடியாது!" என்றான்.

"அப்படி சாப்பிட்டு உயிர் வாழ வேண்டுமா? இந்த பாழாய்ப்போன வேலையை விட்டுவிட்டு, பசுமாடு வாங்கிப் பால் வியாபாரம் செய்து பிழைக்கலாமே!" என்றாள்.

அதற்கு ஆண்டியப்பன் "எனக்கு உன் புத்திமதி தேவையில்லை! பேசாமல் நான் சம்பாதித்துத் தரும் பணத்தை வைத்து சோறு ஆக்கிப் போடு! மறுபடியும் என் தொழிலைப் பற்றிப் பேசினால் உன்னைத் தொலைத்து விடுவேன்!" என்று எரிந்து விழுந்தான்.

லட்சுமி அன்றிரவு சாப்பிடாமல் அழுதுகொண்டே படுத்துக் கொண்டாள்.

தன் கணவன் செய்வது பாவம் என்று நம்பிய அவள், அவனை எப்படித் திருத்துவது என்று யோசித்தவாறே தூங்கிப் போனாள்.

மறுநாள் காலை ஆண்டியப்பன் அவளிடம், "லட்சுமி! கங்காபுரத்து ஜமீன்தார் தன் குலதெய்வத்திற்கு பூஜை செய்யப் போகிறாராம்!

அம்மனுக்குப் பலியிட ஒரு ஆட்டுக் குட்டி வேண்டும் என்று சொன்னார்....... (தொடரும்)

## புதுமைப்பித்தன்



புதுமைப்பித்தன் என்ற புனைப்பெயர் கொண்ட சொ. விருத்தாசலம் 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார்.

இவர் மிகச்சிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடியாக இவர் கருதப்படுகிறார். கூரிய சமூக விமர்சனமும் நையாண்டியும், முற்போக்குச் சிந்தனையும், இலக்கியச் சுவையும் கொண்ட இவருடைய படைப்புகள், இவரின் தனித்தன்மையினை நிறுவுகின்றன. இவரது படைப்புகள் தமிழ் இலக்கியத்தில் மிகவும் அதிகமாக விவாதிக்கப்பட்டுள்ளன. 2002 இல் தமிழக அரசு இவரது படைப்புகளை நாட்டுடமை ஆக்கியது. இவரது முதற்படைப்பான குலோப் ஜான் காதல் காந்தி இதழில் 1933-இல் வெளிவந்தது.

1934-இலிருந்து மணிக்கொடியில் இவரது படைப்புகள் பிரசுரமாகத் துவங்கின. மணிக்கொடியில் வெளிவந்த இவரின் முதல் சிறுகதை ஆத்தங்கரைப் பிள்ளையார். இந்த காலகட்டத்தில் அவர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். இவர் வாழ்ந்த இடங்களான திருநெல்வேலியையும் சென்னையையும் மையமாகக் கொண்டே இவரது படைப்புகள் அமைந்தன.

புதுமைப்பித்தன் எழுத்துப்பணியில் முழுவீச்சில் ஈடுபட்டது 15 ஆண்டுகளுக்கும் குறைவான காலம் தான். அக்குறுகிய கால அளவிலேயே அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையுள்ள கட்டுரைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், புத்தக விமர்சனங்கள் என எழுதிக் குவித்தார். அவரது எழுத்துக்கள் அவரைப் புரட்சி எழுத்தாளராக அடையாளம் காட்டின. அவர் கையாண்ட விடயங்களும் கதாபாத்திரங்களும் தமிழ்ப் புனைவு உலகுக்குப் புதியதாய் அமைந்தன. தமிழ் இலக்கிய உலகம் சில எழுதப்படாத விதிகளால் முடக்கப்பட்டிருப்பதாக அவர் கருதினார்.

புதுமைப்பித்தனின் சிறுகதைகள் தான் அவருக்கு எழுத்துலகில் தனி இடத்தை அளித்தன. அவர் எழுதியதாகக் கணிக்கப்படும் 108 சிறு கதைகளில் 48 மட்டுமே அவர் காலத்திலேயே வெளியாகின. அவரது சிறு கதைகள் மணிக்கொடி, கலைமகள், ஜோதி, சுதந்திர சங்கு, ஊழியன், தமிழமணி, தினமணியின் ஆண்டுமலர், நந்தன் ஆகிய பத்திரிக்கைகளில் பிரசுரமாயின. மற்றவை அவர் மறைவுக்குப் பின்னர் வெவ்வேறு காலங்களில் பிரசுரமாயின. கடைசித் தொகுப்பு 2000ல் வெளியானது. புதுமைப்பித்தன் 1930களில் உருவாகிய மணிக்கொடி இயக்கத்தின் முக்கிய எழுத்தாளர்களுள் ஒருவராக விளங்கினார்.

இவர் திரைப்படத் துறையிலும் ஆர்வம் செலுத்தினார். ஜெமினி நிறுவனத்தின் அவ்வை மற்றும் காமவல்லி படங்களில் பணிபுரிந்தார். பின்பு திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான "பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்"-ஐத் துவங்கி வசந்தவல்லி என்ற படத்தைத் தயாரிக்க முயன்று தோல்வியுற்றார். எம். கே. தியாகராஜ பாகவதரின் ராஜமுக்தி திரைப்படத்திற்கு வசனம எழுதுவதற்காக புனேவில் சில மாதங்கள் வாழ்ந்தார். அங்கு அவர் கடுமையான காச நோய்க்கு ஆளாகி மே 5, 1948-இல் காலமானார்.

## 04.2014 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1607 - எண்பதாண்டுப் போர்: கிப்ரால்ட்டரில் டச்சுக் கடற்படையினர் ஸ்பானிய கடற்படைக் கப்பலைத் தாக்கி அழித்தனர்.
- 1829 - மேற்கு அவுஸ்திரேலியாவில் சார்ல்ஸ் ஃபிரெமாண்டில் சலேஞ்சர் என்ற கப்பலில் வந்து தரையிறங்கி சுவான் ஆற்று குடியேற்றத்தை ஆரம்பித்தார்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் வோஷிங்டன், டிசியை அடைந்தனர்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் டேவிட் பராகுட் தலைமையில் லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரை கூட்டமைப்பினரிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஆர்கன்சஸ் மாநிலத்தில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினர் பெரும் வெற்றி பெற்றனர்.
- 1898 - ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: ஆஸ்திரேலியா, பிரித்தானியா, நியூசிலாந்து மற்றும் பிரெஞ்சுப் படைகள் துருக்கியின் கலிப்பொலியை முற்றுகையிட்டனர்.
- 1916 - அயர்லாந்தில் இராணுவச் சட்டத்தை ஐக்கிய இராச்சியம் பிறப்பித்தது.
- 1916- அன்சாக் நாள் முதற் தடவையாக நினைவு கூரப்பட்டது.
- 1945 - நாசி ஆக்கிரமிப்பு இராணுவம் வடக்கு இத்தாலியில் இருந்து விலகியது.
- 1961 - ரொபர்ட் நொய்ஸ் ஒருங்கிணைந்த மின்சுற்றுக்கான (integrated circuit) காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1966 - தாஷ்கெண்ட் நகரத்தின் பெரும் பகுதி நில நடுக்கத்தால் அழிந்தது. 300,000 பேர் வீடுகளை இழந்தனர்.
- 1974 - போர்த்துக்கலில் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்த பாசிச அரசு கவிழ்க்கப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது.
- 1982 - காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலியப் படைகள் முழுவதுமாக சினாய் தீபகற்பத்தில் இருந்து வெளியேறியது.
- 1983 - பயனியர் 10 விண்கலம் புளூட்டோ கிரகத்தின் சுற்றுப்பாதையைத் தாண்டிச் சென்றது.
- 1983 - ஹிட்லரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் "ஹிட்லரின் நாட்குறிப்புகள்" நூலின் முதற் பகுதியை ஜேர்மனியின் "ஸ்டேர்ன்" இதழ் வெளியிட்டது.
- 1986 - சுவாசிலாந்தின் மன்னனாக மூன்றாம் முசுவாட்டி முடிசூடினார்.
- 1988 - இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜானுக் என்பவருக்கு இஸ்ரேல் மரண தண்டனை விதித்தது.
- 2005 - இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களால் 1937 இல் களவாடப்பட்ட 1700-ஆண்டுகள் பழமையான சதுர நினைவுத்தூபியின் கடைசித் துண்டு எதியோப்பியாவுக்கு கொண்டுவரப்பட்டது.

### பிறப்புகள்

- 1599 - ஒலிவர் குரொம்வெல், இங்கிலாந்தில் முடியாட்சியை நீக்கியவர் (இ. 1658)
- 1840 - பியோத்தர் சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர். (இ. 1893)
- 1874 - மார்க்கோனி, வானொலியைக் கண்டுபிடித்தவர் (இ. 1937)
- **1906 - புதுமைப்பித்தன், நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடி (இ.1948)**
- 1940 - அல் பசீனோ, அமெரிக்கத் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 2005 - சுவாமி ரங்கநாதானந்தர், இந்தியாவின் சமயத் தலைவர் (பி. 1908)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

# 14.04.2014-14.05.2014



## சிம்மம்

**மகம், பூரம் , உத்தரம் 1 ஆம் பாதம்**

**சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும் நேரம்! நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று சொல்லும் சிம்ம இராசிநேயர்களே!**

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சந்திர மங்கள யோகம், சனி சுக்ர பரிவர்த்தனை ஆகிய அமைப்போடு பிறப்பதால் சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான மாதமாக இருக்குமென்றே சொல்லலாம். வாக்கு ஸ்தானத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கும் செவ்வாயை அந்த ராசிநாதன் புதன் பார்ப்பதால் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக அமையும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எடுத்த முடிவை செயற்படுத்த இனிய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

அதன் விளைவாக கொடுத்த வாக்கையும் காப்பாற்றுவீர்கள். கூட்டு முயற்சியில் இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் அகலும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். குடியிருக்கும் இடம் அல்லது வீட்டை விலைக்கு வாங்க வேண்டுமென்று நினைத்தவர்கள் அதில் வெற்றி காண்பர். கூடுதல் லாபம் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

சனியின் வக்ர இயக்கம் ஓரளவு நன்மையை கொடுக்கும். எல்லோருக்கும் வாழ்க்கையில் எதிர்ப்புகள் இருக்கும். உங்களைப் பொறுத்தவரை எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே வாழ்க்கை அமைந்திருக்கும் என்றே சொல்லலாம். காரணம், எதிரிகள் ஸ்தானாதிபதியாக சனி விளங்குகிறார். அந்த சனி, மாதத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் இருப்பதால் எதிரிகளின் பலம் குறையும். எதிரிகள் உதிரியாகி உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாகும் விதத்தில் ஒரு சில சம்பவங்கள் நடைபெறப் போகின்றன.

## சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும் நேரம்!

இருப்பினும் சப்தமாதிபதியாகவும் சனி விளங்குவதால் உடனிருப்பவர்களால் ஒரு சில தொல்லைகள் உருவாகலாம். உங்கள் சிந்தனையை செயலாக்க விடாமல் அவர்கள் தடை செய்யலாம். அனுகூலங்கள் ஆரம்பமாக வேண்டுமென்று சொன்னால் சனி பகவான் சன்னிதிக்கு தான் செல்ல வேண்டும். உங்கள் ஜாதகப்படி அனுகூலம் தரும் சனி பகவானின் ஆலயம் எது என்று கண்டறிந்து வழிபட்டு வருவது நல்லது. 'கருநிறக் காகமேறி காசினி தன்னைக் காக்கும்' என்ற சனி கவசம் பாடி, எள் தீபம் ஏற்றி வழிபட்டால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வந்து சேரும்.

**மேஷ புதனும், இடப புதனும்!**

மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சூரியனோடு தன் லாபாதிபதியான புதன் இணைகிறார். எனவே, தன வரவு தாராளமாக வந்து சேரும். மனதில் நினைத்தவைகளை எல்லாம் ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள். அரசு வழி ஆதாயமும் அன்னியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வெளிநாடு மற்றும வெளி மாநிலங்களில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். இடப புதனின் சஞ்சாரத்தால் புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும். தன்னம்பிக்கையும், தைரியமும் கொண்டு தக்கவிதத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளின் கல்வி நலன்கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

தன லாபாதிபதியான புதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் நேரம் மே 1 ஆம் திகதியாகும். இதன் விளைவாக ஒப்பந்தங்கள் வந்து சேரும். மூடிக்கிடந்த தொழிலுக்கு கூட திறப்புவிழா நடத்துவீர்கள். முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும் நேரமிது.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 28ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். சகாய ஸ்தானாதிபதி உச்சம் பெறுவது யோகம்தான். தொழில் வளம் மேலோங்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து ஆனந்தமடைவீர்கள். பாதியில் நின்ற வீடு கட்டும் பணி மீதியும் தொடரும். பணப் பற்றாக்குறையின் காரணமாக வாங்கிய கடனைத் திரும்ப செலுத்துவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. இம்மாதம் கற்பக விநாயகர் வழிபாடு கவலையைப் போக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வளர்ச்சி கூடும். வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும். மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து கொண்டேஇருக்கும். பொருளாதார நிறைவும், போற்றுகிற அளவிற்கு வாழ்க்கைத் தரத்தில் உயர்வும் கிடைக்கும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். பக்கத்தில் இருப்பவர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். முன் வைத்த காலை பின்வைக்காத நீங்கள் நினைத்ததைச் சாதிக்கும் நேரமாக இந்த நேரத்தைக் கருதலாம். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். அப்போதைக்கப்போது தெய்வ வழிபாடுகளைத் தேர்ந்தெடுத்து செய்வது நல்லது. திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வந்தால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நேரம்! சிந்தித்த கருத்துக்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் கன்னி இராசி நேயர்களே!**

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, வக்ர செவ்வாயின் இயக்கமும், சனி, சுக்ர பரிவர்த்தனையும் நலல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளும் விதத்திலேயே இருக்கிறது. பொதுவாக ஜீவன ஸ்தானத்தில் பரிவர்த்தனை யோகம் அமைந்திருப்பதால் நட்பால் நல்ல காரியங்கள் நடைபெறும். நண்பர்களிடம் நீங்கள் ஒப்படைத்த பொறுப்புகள் நிறைவேறி மகிழ்ச்சியை வழங்கும்.

நல்ல இடத்தில் உங்களை பணியில் அமர்த்திக் கொள்ள அழைப்புகள் வந்து சேரும். குடும்பச் சுமையை ஒரு வழியாகச் சமாளிப்பீர்கள். இடமாற்றம், வீடுமாற்றம் செய்ய நீண்ட நாட்களாக ஏற்பாடுகள் செய்தும் எதுவும் கிடைக்காமல் மனக்குழப்பத்தோடு இருந்த உங்களுக்கு இந்த மாதம் அனுகூலத் தகவல்கள் வந்து சேரும்.

## நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நேரம்

பத்தில் சஞ்சரிக்கும் குரு பதவி மாற்றத்தையோ அல்லது பதவியில் புதிய பொறுப்புகளைக் கூட கொடுக்கலாம். அந்த குருவின் பார்வை சுக்ரனின் மீது பதிவதால் எதிர்பாராத திருப்பங்கள் ஏப்ரல் 27ஆம் திகதிக்குள் நடைபெறலாம். அதன் பின்னால் சுக்ரன் அடுத்த ராசிக்கு மாறிச் செல்கிறார். குரு, சுக்ர சந்திப்பின்போது எதிர்பாராத நிகழ்வுகள் ஏராளமாக நடைபெறும்.

பகை நட்பாகும், நட்பு பகையாகும். பஞ்சாயத்து தலைவர் முதல் பாராளுமன்ற யோகம் வரை பொறுப்புகள் கிடைக்குமா? என்று அஞ்சாமல் கேட்டு வந்த உங்களுக்கு அதிசயிக்கும் விதத்தில் வாய்ப்புகள் வந்து சேரப்போகின்றன. 12இற்கு அதிபதி சூரியன் 8இல் மறைவதால் விபரீத ராஜயோக அடிப்படையிலும் செயற்படும்.

அன்னிய தேச அழைப்புகள் முதல் அன்றாட வாழ்க்கை வளம் பெற எடுத்த முயற்சி வரை கைகொடுத்து உதவ நண்பர்கள் காத்திருப்பார்கள். என்ன இருந்தாலும், ராகு-கேதுக்களின் ஆதிக்கம் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது. எனவே சர்ப்பதோஷ நிவர்த்தி பரிகாரத்தை தக்க விதத்தில் யோக பலம் பெற்ற நாளில் செய்வது நல்லது.

**மேஷ புதன், இடப புதனின் சஞ்சாரம்!**

ராசிநாதன் புதன், மேஷ ராசியில் மாதத் தொடக்கத்தில் சஞ்சரிக்கப் போகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் எட்டில் மறைவது யோகம் தான். சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டுவீர்கள். மாமன் மைத்துனர் வழி ஒத்துழைப்போடு மங்கல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இடப ராசியில் புதன் மே 3 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக பூர்வீக சொத்து தகராறுகளும், பங்காளி பகைகளும் மாறும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து அதிசயிக்கத்தக்க விதத்தில் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொடுப்பர்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

2, 9இற்கு அதிபதியான சுக்ரன் ஏப்ரல் 28 ஆம் திகதி மீன ராசியில் உச்சம் பெறப் போகிறார். தனாதிபதி உச்சம் பெற்றால் தன வரவு தாராளமாக வரவேண்டும் அல்லவா? எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். கொடுத்து வைத்த கடன் தொகைகள் தட்டிக் கேட்காமல் தானாகவே வந்து சேரும்.

மட்டற்ற மகிழ்ச்சியில் திளைக்கும் இந்த நேரத்தில் மக்கள் செல்வங்களுக்கு சுபச் சடங்குகள், மணவிழாக்கள், வளைகாப்பு போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வைத்துப் பார்ப்பீர்கள். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். இம்மாதம் வடக்கு நோக்கிய அம்மனை வழிபட்டு வளர்ச்சியைக் கூட்டிக்கொள்வீர்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் சுக்ர பலம் கூடுதலாக இருப்பதால் இக்காலத்தில் நல்ல சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். நல்லவர்களின் தொடர்பு நீடிக்கும். நன்றி மறந்து உங்களை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் வந்திணைவர்.


பொருளாதாரநிலை உயரும். மதிநுட்பம் மிக்கவர்கள் உங்கள் அருகிலிருந்து ஆலோசனைகளை வழங்குவர். கணவன்-மனைவக்குள் கருத்து வேறுபாடுகள் அகலும். பணி புரியும் இடத்தில் இருந்த பிரச்சினையும் நல்ல முடிவிற்கு வரும். சர்ப்ப சாந்தியும், ராகு-கேது பரிகாரமும் செய்வதன் மூலம் சந்தோஷததை தக்க வைத்துக்கொள்ள இயலும். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதியும், கல்யாண வாய்ப்பு கருதியும், சீர் வரிசைச் சாமான்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லத்தீன் அமெரிக்காவின் தனிமை!

லத்தீன் அமெரிக்காவின் யதார்த்தம் நீங்கள் கற்பனையில்கூட தரிசிக்கு முடியாத குரூரங்களையும் விநோதங்களையும் கொண்டது. அந்த யதார்த்தங்களை விவரிக்க மரபுரீதியான உத்திகள்கூட இல்லையென்பதுதான் எங்கள் தன்மையின் சாரம். காப்ரியல் கார்சியா மார்க்



வெஸின் நோபல் பரிசு ஏற்புரைக்குப் பின்வரும் இந்த வரிகளுக்குள் பொதிந்து கிடப்பது, ஐந்து நூற்றாண்டுகளின் சோகமும் கோபமும். தனிமையின் நூறு ஆண்டுகள் அந்த வரலாற்றின் ஒரு செதுக்கல் தான். அந்த வரலாற்றுச் சோகம் 1492 ஆம் ஆண்டில் கொலம்பஸ் என்ற ஸ்பானிய மாலுமியின் வருகையில் துவங்கியது.

### பூர்வ குடிகளை அழைத்த வரலாறு

ஸ்பானிய மன்னரின் ஆசி பெற்று, தங்கம் இருக்கும் இந்தியாவைத் தேடிப் புறப்பட்ட கொலம்பஸ், இந்தியா என்று நம்பி இறங்கியது, இப்போது கரீபியத் தீவுகள் என்றறியப்படும் நிலப் பகுதியில் தான். அங்கு வாழ்ந்த அரவாக் பூர்வ குடியினர் கொலம்பஸை எப்படி வரவேற்றனர்? அரவாக்குகள் எங்களை நோக்கி உணவு, தண்ணீர் ஏந்தி ஓடி வந்தனர். கிளிகளையும் பஞ்சுப் பந்துகளையும் ஈட்டிகளையும் பரிசாகக் கொடுத்தார்கள். அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இல்லை. ஆயுதங்கள் என்றால் என்னவென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களிடம் ஒரு வாளியைக் கொடுத்தேன். விவரமறியாத அவர்கள் அதன் கூரான ஒரு பகுதியைப் பிடித்ததால் காயமடைந்தனர். கட்டுமஸ்தான உடலமைப்பைக் கொண்ட அவர்கள் நல்ல வேலைக்காரர்களாக இருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டேன்.

இப்படிக் குறிப்பெழுதிய கொலம்பஸ் அவர்களுக்கு ஓர் ஆணையிட்டார். 14 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு அரவாக்கும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குறிப்பிட்ட அளவு தங்கம் கொண்டுவர வேண்டும். கொண்டுவருபவர்கள் கழுத்தில் தாமிரச் செப்புகள் மாட்டப்பட்டன. தாமிரச் செப்பு இல்லாதவர்களின் கைகள் வெட்டப்பட்டன. ஆயுதம் என்றால் என்னவென்று அறியாத அப்பாவிகளால் ஸ்பானியக் கொள்ளையரின் குதிரைகளையும் வாள்களையும் எதிர்த்து நிற்க முடியவில்லை. கசாவா எனும் விஷக் கிழங்குகளைத் தின்று கூட்டம் கூட்டமாகத் தற்கொலை செய்து கொண்டனர். பச்சிளங் குழந்தைகள் ஸ்பானியர் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்று பயந்து, அந்தக் குழந்தைகளை அவர்களே கொன்றுவிட்டனர். இரண்டே ஆண்டுகளில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான அரவாக்குகள் கொல்லப்பட்டனர்; அல்லது தற்கொலை செய்து கொண்டனர். 1650 ஆம் ஆண்டு வெளிவந்த ஓர் அறிக்கை இப்போது ஹைட்டி என்றழைக்கப்படும் தீவில் அரவாக் இனமே அழிந்துவிட்டது என்று கூறுகிறது. கொலம்பஸுக்குப் பின் தென் அமெரிக்காவில் வந்திறங்கிய ஐரோப்பியர்கள் ஆஸ்டெக், இன்கா, ஹாட்டரர்ஸ், பெக்வெட் பூர்வகுடி இனங்களைக் கொன்றழித்தனர். இங்கிலாந்திலிருந்து சென்றவர்கள் ஆக்கிரமித்த வட அமெரிக்காவுக்கு ஆங்கில அமெரிக்கா என்றும் லத்தீன் மொழியை வேராகக் கொண்ட ஸ்பானிய, போர்த்துக்கீசிய மொழி பேசுபவர்கள் ஆக்கிரமித்த தென் பகுதி லத்தீன் அமெரிக்கா என்றும் பெயர்பெற்றது இப்படித்தான்.

### ஸ்பெயின்: உலகின் முதல் வல்லரசு

ஐரோப்பிய முதலாளித்துவத்தின் மூலதனப் பசிக்கு அமெரிக்க பூர்வ குடியினரின் ரத்தம்தான் முதல் படையல்! 1000 த்துக்கும் மேற்பட்ட தானிய வகைகளைப் பயிர் செய்யவும் மச்சு பிச்சு என்ற அற்புதக் கட்டடக் கலையின் சின்னத்தை உருவாக்கவும் திறன் பெற்ற பூர்வ குடிகளின் கலாசாரத்தின் கல்லறையின் மீதுதான் ஐரோப்பிய நாகரிகம் எழுப்பப்பட்டது.

தென் அமெரிக்காவில் கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டு பிடித்தவுடன் அதன்மீது ஸ்பெயினும் போர்ச்சுகலும் உரிமை கொண்டாடின. அன்றைய போப்பாண்டவர் ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்தவர். போர்த்துக்கீசிய நாட்டுக்கு ஆதரவாக அளிக்கப்பட்டிருந்த போப் ஆணைகள் இரத்துச் செய்யப்பட்டு, தென் அமெரிக்காவைச் சூறையாடும் முழு உரிமை ஸ்பெயினுக்கு வழங்கப்பட்டது.

கிறிஸ்டோபர் கொலம்பஸ் தெய்வீக அருளுடன் மிகவும் சிரமப்பட்டு ஒரு பெருங்கடலைக் கடந்து சில தீவுகளையும் சில பிரதான நிலப் பகுதிகளையும் கண்டுபிடித்துள்ளார். அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் உடை அணிவதில்லையென்றும், மாமிசம் சாப்பிடுவதில்லை என்றும் கூறப்படுகிறது. அம்மக்கள் சொர்க்கத்தில் இருக்கும் ஒரு கடவுளின் மேல் நம்பிக்கை கொண்டவர்கள். கத்தோலிக்க மதத்தைத் தழுவி, நல்லொழுக்க நெறிகளில் பயிற்சி பெறத் தயாராக உள்ளனர். இத் தீவுகளில் தங்கம், நறுமணப் பொருட்கள் மற்றும் பல அரிய பொக்கிஷங்கள் நிறைந்துள்ளன. ஸ்பெயின் நாட்டு அரசக் குடியரான நீங்கள் உங்கள் மூதாதையரைப் போலவே அப்பிரதேசங்களையும் அங்கு வாழும் மக்களையும் உங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து அவர்களுக்கு கத்தோலிக்க நம்பிக்கை ஏற்படுத்த வேண்டுமென விரும்புகிறீர்கள். இப்படிக் கூறிய போப்பின் ஆணை ஆர்க்டிக் கடலிலிருந்து அண்டார்டிக் கடல் வரை ஓர் எல்லைக் கோட்டினை வரைந்து, அதற்கு உட்பட்ட பகுதிகள் ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தம் என்று வரையறுத்தது.

கடவுளின் ஆசியுடன் பூர்வகுடி அமெரிக்கர்களிடமிருந்து திருடிய நிலப்பரப்புகளிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட தங்கமும் வெள்ளியும் தான் ஸ்பெயினை 15,16 நூற்றாண்டுகளில் உலகின் முதல் வல்லரசாக மாற்றின. ஸ்பெயினுக்கு எதிராக லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட பல புரட்சிகளுக்கு எதிராக நடந்த பல மக்கள் எழுச்சிகளுக்குத் தலைமை தாங்கியவர்தான் சிமோன் பொலிவர்.

### அமெரிக்க வல்லரசு

இதே காலகட்டத்தில் வட அமெரிக்கப் பகுதியில் பூர்வகுடி இந்தியரின் அழிவின் மீது உருவாக்கப்பட்ட புகையிலைத் தோட்டங்களில் பணிபுரிய இலட்சக் கணக்கான ஆபிரிக்கர்களை அடிமைகளாக இறக்குமதி செய்து, பொருளாதார வளர்ச்சியடைந்தது அமெரிக்கா.

லத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பிய சக்திகளின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக 1830களில் மன்றோ கொள்கையை 'அமெரிக்கா வெளியிட்டது. இந்த வல்லரசுப் போட்டியில் இறுதியாக 1898 இல் நடந்த போரில் அமெரிக்கா ஸ்பெயினை வெற்றிகொண்டது.

லத்தீன் அமெரிக்காவைத் தன் ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்த அமெரிக்கா, பாடிஸ்டா என்ற சர்வாதிகாரியின் ஆட்சியிலிருந்த கியூபாவில் தலையிடும் உரிமையை சட்டமாக்கியது; தன்னிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், டொமினிகன் குடியரசின் வங்கிகள், நிதிநிறுவனங்களைக் கந்துவட்டிக்காரர்கள் போலக் கைப்பற்றியது. மெக்சிக்கோ நாட்டில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை அடக்க, தன் இராணுவத்தை அனுப்பி அந்நாட்டுச் சர்வாதிகாரி போர்ஃபிரியோ டையஸுக்கு ஆதரவாக ஜனநாயகத்தைக் காப்பாற்றியது. ஹோண்டுரோஸ் நாட்டுக்குள் நான்குமுறை இராணுவத்தை அனுப்பியது. பனாமா நாட்டிலிருந்து நிலப்பகுதியை அபகரித்து பனாமா கால்வாயை வெட்டி, கப்பல் போக்குவரத்தை அதிகரித்துத் தன் வர்த்தகத்தை வளப்படுத்தியது. அமெரிக்கத் தொழிலதிபர்களின் நலன்களைப் பாதுகாக்க அமெரிக்கா செய்த அட்டூழியங்களின் இந்தப் பட்டியல் அட்லாண்டிக் பெருங்கடலின் கரையை விட நீளமானது.

சர்வாதிகாரிகளின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், அமெரிக்கத் தொழிலதிபர்களின் சுரங்கங்கள், பழத் தோட்டங்களை நாட்டுடைமையாக்க நினைத்த சோஷலிஸ அரசாங்கங்களின் கொடுங்கோன்மையை ஒடுக்கவும் அமெரிக்கா எடுத்த முயற்சிகள், ஐரோப்பிய காலனியாதிக்கங்கள் முன்பு செய்த அட்டூழியங்கள் ஏற்படுத்திய வடுக்களை மீண்டும் காயங்களாக்கின.

போரில் இழந்த வலது காலுக்கு ஒரு பிரம்மாண்டமான இறுதி நிகழ்ச்சி நடத்திய மெக்சிக்கோவின் சர்வாதிகாரி, ஈக்வடார் நாட்டின் சர்வாதிகாரி இறந்த பிறகு ஜனாதிபதியின் இருக்கையில் இராணுவ உடையுடனும் பதக்கங்களுடனும் அமர்த்தப்பட்ட அவருடைய பிணம், முப்பதாயிரம் விவசாயிகளைப் படுகொலை செய்த பக்தி நிறைந்த எல் சால்வடார் நாட்டு அதிபர், சிலி நாட்டின் சோஷலிச அதிபரைக் கொன்று பினோசெட் என்ற சர்வாதிகார பொம்மையை அமெரிக்கா ஆட்சியில் அமர்த்திய பிறகு, சிலி நாட்டிலிருந்து ஓடிப்போன, காணாமற்போன பத்து இலட்சம் மக்கள்- இப்படி தன் நோபல் ஏற்புரையில் மார்க்வெஸ் பட்டியலிடும் விநோதங்களும் குரூரங்களும் எந்தக் கற்பனைப் படைப்பையும் விஞ்சும் யதார்த்தங்கள்.

இவை அவரின் மாய யதார்த்த எழுத்துக்களில் கனவுகளாகவும் நம்புதற்கரிய புனைவுகளாகவும் வெளிப்படுகின்றன.

லத்தின் அமெரிக்காவின் தனிமை நூறு ஆண்டுகளில் அல்ல. ஐநூறு ஆண்டுகளில் உருவானது.

-இணையம்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலி போராளிகளுக்கு உரிய வகையில் அரசாங்கம் புனர்வாழ்வளிக்கவில்லை

## சரத்பொன்சேகா சுட்டிக்காட்டு



முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி போராளிகளுக்கு உரிய வகையில் அரசாங்கம் புனர்வாழ்வு அளிக்கவில்லை என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

உரிய முறையில் புனர்வாழ்வு அளிக்கப்படாத சில முன்னாள் போராளிகளே மீண்டும் ஈழ இராச்சிய கொள்கைகளை பின்பற்றி வருவதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக வெளி நாடுகளிடமிருந்து பாரியளவில் நிதி உதவி கிடைகப்பெற்றுள்ளதாக வும், அந்தப் பணம் உரிய வகையில் பயன்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்து வருபவரே இவ்வாறு பணத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் உரிய முறையில் புனர்வாழ்வு அளிக்கும் பணிகளை மேற்கொள்ளாத காரணத்தினால் , மீண்டும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீள ஒருங்கிணைய திட்டமிடுவதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உரிய முறையில் நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்படாமையும் புலிகள் மீள ஒருங்கிணைய முயற்சிப்பதற்கான முக்கிய மான ஏதுவெனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பணத்தை கொள்ளையிட்டுளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தேர்தல் காலங்களில் அரசாங்கம் இனவாதத்தை தூண்டி வாகு வேட்டையில ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தேர்தல்களின்போதும் தெற்கில் சிங்கள பௌத்த இன, மத வாதத்தை தூண்டி அரசாங்கம் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக சரத்பொன் சேகா தெரிவித்துள்ளார். (2)

# இளைஞர் மாநாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது

(கொழும்பு)

சர்வதேச இளைஞர் மாநாடு இலங்கையில் நடைபெறுவதால் எமது தேசத்திற்கும் இளைஞர்களுக்கும் முழு உலகுடனும் கைகோர்ப்பதற்கான அரியதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மே மாதம் 6 ஆம்திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வன்ர அம்பாந்தோட்டை மாகம்புர ருஹுணுபுர பேரவை மண்டபம் மற்றும் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபங்களில் நடைபெறவுள்ள சர்வதேச இளைஞர் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை ஆராய்வதற்காக அம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர பேரவை மண்டபத்திற்கு விஜயம் செய்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச இளைஞர் மாநாடு ஆசிய நாடொன்றில் முதல் தடவையாக இலங்கையில் நடைபெறவுள்ளதோடு இதில் இதுவரை 106 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவர்களுடன் இளைஞர் அமைச்சர்கள் 27 பேரும் ஐக்கிய நாடுகள் சபையின் தலைவரும் கலந்து கொள்ளவுள்ளதனால் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக திகழப்போகின்றது.

எமது நாட்டில் மாத்திரமன்றி முழு உலக நாடுகளினதும் இளைஞர்களினதும் எதிர்பார்புக்களை நிறைவேற்றக் கூடிய கொழும்பு பிரகடனமும் வெளியிடப்படவுள்ளது.

இது எமது நாட்டின் பெயரை மேலோங்கச் செய்யும் ஒரு நிகழ்வாகத் திகழும். இவ்வாறான நிகழ்வுகளை இலங்கையில் நடத்துவதற்கான சந்தர்ப்பம் கிட்டியதற்கான காரணம், ஜனாதிபதியின் ஆலோசனையும் வழிகாட்டலுமே.

நாட்டிலுள்ள இளைஞர்களுக்கு சுய சக்தியால் எழுந்திருக்கக் கூடிய சிறந்த வழிகாட்டலை வழங்கக் கூடிய ஒரு சிறந்த தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காணப்படுகிறார். (2)

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இணைய விளம்பரங்களால் அதிகரிப்பு

இணைய விளம்பரங்களின் மூலம் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர், சிறுமியரை கவரக் கூடிய வகையில் இணையத்தில் விளம்பரம் செய்து, அவர்களுடன் பேசி, அவர்களை நேர்முகத் தேர்விற்கு அழைத்து துஷ்பிரயோகம் செய்வதாகவும் வேறு நபர்களுக்கு சிறுவர், சிறுமியரை விற்பனை செய்வதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தோட்ட அதிகாரி மற்றும் கணனி தொழில் நுட்பவியலாளர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்வேறு செயற்றிட்டங்களுக்கு உதவி வழங்குவதாகத் தெரிவித்து இணையத்தில் விளம்பரம் செய்யப்படுகின்றது.

விளம்பரம் தொடர்பில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளும் ஆவலுடன் தொடர்பு கொள்ளும் சிறுவர், சிறுமியரை சிலர் ஏமாற்றி துஷ்பிரயோகம் செய்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (2)

# பணியாளர்களை லிபியாவுக்கு அனுப்புவது இடைநிறுத்தம்

லிபியாவுக்கு இலங்கைப் பணியாளர்களை அனுப்பும் நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு லிபியாவின் தற்போதைய நிலைமையை கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளமையையடுத்து வெளிநாட்டு சேவைகள் மற்றும் நலன் புரியமைச்சர் டிலான் பெரேராவின பணிப்புரைக்கமைய இந்நடைமுறை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிணங்க மறு அறிவித்தல் வரை தனிப்பட்ட ரீதியிலோ அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திற்கூடாகவோ லிபியாவுக்கு இலங்கையிலிருந்து வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் நடவடிக்கைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பேச்சாளர் மங்கல ரந்தெனிய கூறினார்.

லிபியாவின் நிலைமை வழமைக்கு திரும்பியதும் இலங்கைப் பணியாளர்கள் மீண்டும் அந்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவரெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, லிபியாவில் தற்போது தொழில் புரிந்துவரும் சுமார் 20 இலங்கையர்களை மீண்டும் பாதுகாப்பாக இலங்கை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளையும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# இன்று ஒரு தகவல்

## அன்பு என்றால் என்ன?

ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டேன், இந்த உலகத்தில் எல்லோரும் அன்பைப் பற்றியும் அதன் பெருமைகளைப் பற்றியுமே பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

அன்பு அவ்வளவு தூரம் பேசவேண்டிய ஒரு விடயமா என்று கேட்டேன்?

இதற்கு அவர் சொன்னார்,

"எமக்கு உண்மையான அன்பு என்றால் என்ன என்றே தெரியாது. அதனால்தான் அதைப் பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம் "என்றார்.

எனக்குப் புரியவில்லை. பின்னர் அவர் விளக்கமாகச் சொன்னார்.

பொதுவாக நாம் வாழ்ந்து பார்க்காத விடயத்தைப் பற்றி எமது மனம் அதிகமாகப் பேசும். உண்மையான அன்பை நாம் என்றும் அனுபவித்துப் பார்த்ததில்லை. அது எம்மிடம் உயிரோடு இயங்கவில்லை.

உண்மையில் அன்பு இயங்கிக்கொண்டிருந்தால், நாம் அதைப் பற்றி அதிகமாகப் பேச வேண்டிய அவசியமில்லை. நாம் அதைப்பற்றி அதிகமாகப் பேசுவதிலிருந்தே அது உயிரோடு இயங்கவில்லை என்று தெளிவாகின்றது.

நாம் பல வழிகளிலே இயங்குவது போல் ஒரு பொய்த் தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதைப்பற்றிக் கவிதை எழுதுவது, மேடையில் பேசுவது, நாடகம், சினிமா இப்படி எல்லாவற்றிலும் அன்பைப் பற்றி அதிகமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அன்பைப்பற்றி ஒன்றுமே தெரியாதவன் எழுதுகின்ற கவிதை அன்பைப்பற்றி நன்றாகத் தெரிந்தவன் எழுதும் கவிதையை விட நன்றாக இருக்கும்.

ஏனென்றால், தெரியாதவனிடம் இருக்கும் வெறுமை ஆழமானது. அதை அவன் வார்த்தை ஜாலங்களாலே நிரப்ப முயற்சி செய்கின்றார்.

அதனால், அன்பு என்றால் என்ன? என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

எமக்கு ஏற்படும் ஒருவித இறுக்க நிலையைத்தான் நாம் அன்பு அல்லது காதல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அது முட்டாள்தனமான அகங்காரத்தின் வெளிப்பாடு.

அது ஒரு இறுக்க நிலை.போராட்டம் மற்றும் வேறுபாட்டு நிலை. இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையான அன்பு மிகவும் அமைதியான நிலையிலே ஏற்படும். அங்கே கோபத்திற்கோ, வெறுப்புக்கோ, கவர்ச்சிக்கோ இடம் கிடையாது.

இன்னும் சொல்லப் போனால் உண்மையில் அது அன்பு கிடையாது, வெறுப்பும் கிடையாது. ஏனென்றால், அந்த அன்பு அடுத்தவர்களை சார்ந்திருப்பதில்லை.

இதுதான் பெரியவர்கள் சொல்லும் அன்பின் விளக்கம்.

இந்த அன்புக்கும் நமக்கும் தற்போது எந்த சம்பந்தமும் இல்லை என்றுதான் தோன்றுகின்றது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினர் கையளித்த வீட்டுத்திட்டத்தில் மோசடியா?

## கேப்பாப்பிலவு மக்கள் கேள்வி

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்திற்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட மலசல கூடங்கள் திருப்திகரமானதாக இல்லையென கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கேப்பாப்பிலவு கிராமம் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயமாகக் காணப்படுவதனால் சீனியாமோட்டை பகுதியில் கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தினை அமைத்து மக்கள் 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் 350இற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு 1/4 ஏக்கர் வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நிரந்தர வீடுகளை மீள்குடியேற்ற அமைச்சினூடாக இராணுவம் அமைத்து வழங்கிவருகின்றது.

இதன்படி, முதற்கட்டமாக 50 வீடுகளும், இரண்டாம் கட்டமாக 101 வீடுகளும் அமைத்து மக்களிடம் கையளித்துள்ளது.

இவ்வாறாக 151 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ள போதிலும், வீடுகளுடன் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள மலசலகூடங்களின் குழிகள் சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

மலசலகூட குழிகள், 6 அல்லது 7 அடி ஆழத்தில் தோண்டப்பட்டு அத்திபாரத்திலிருந்து கற்கள் அடுக்கப்பட்டு பின்னர் மேல் பக்கம் மூடப்படவேண்டும்.

எனினும் இராணுவத்தினர் 200 கற்கள் அடுக்கி அமைக்கப்பட வேண்டிய குழியினை 40 கற்களோடு அமைத்துள்ளனர்.



குழியின் ஆழம் முதல் கற்கள் வைத்து அமைக்கப்படாமையினால் அசுத்த நீர் நன்னீருடன் கலந்து நீர் மாசடையக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்ட வசதி வாய்ந்த மக்கள் குழிகளை மீண்டும் புனரமைத்துள்ளனர்.

வசதி வாய்ப்பற்ற 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் இந்தியன் வீட்டுத் திட்டத்தை பெற்றவர்கள் ஒரு வீட்டுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு நிரந்தர வீடு மலசல கூடம் என்பன நேர்த்தியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயினும் மீள்குடியேற்ற அமைச்சினால் ஒரு வீட்டிற்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி கட்டுமானப் பணிகளுக்காகவும் இராணுவத்தினருக்கு சம்பளமாக சுமார் 2 இலட்சத்தையும் வழங்கியுள்ளது.

எனினும் மலசல கூடங்கள் சுகாதார மற்றவாறு குறைந்த செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாயின் மலசலகூடத்தினை தரமற்றதாக அமைத்து இராணுவம் நிதியை மோசடி செய்துள்ளதா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்தோடு மலசல கூடங்கள் அமைக்கப்படும் போதும்அமைக்கப்பட்ட பின்னரும் குறைபாடுகள் பற்றி கிராம மக்களினால் மீள்குடியேற்ற அமைச்சுக்கும் முல்லை.மாவட்ட அரசாங்க அதிபருக்கும்மாவட்ட இராணுவத் தளபதிக்கும் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

சொந்த நிலத்தையும் பறிகொடுத்து விட்டு மாதிரிக் கிராமத்தில் குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படும் உதவிகளில் மோசடி செய்வது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

எனவே இக்கிராமத்திற்கு மேலும் தேவைப்படுகின்ற 210 இற்கு மேற்பட்ட நிரந்தர வீடுகள் விடயத்திலும் இவ்வாறான மோசடிகள் இடம் பெறாமலும் மலசலகூடங்கள் ஏற்கனவே சீரின்மையாகவுள்ள மக்களுக்கும் மாற்று ஏற்பாடுகளை சம்பந்தப்பட்டோர் மேற்கொள்ள வேண்டுமென கேப்பாப்பிலவு மாதிரிக் கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-267)

## அறிவோர் ஒன்றுகூடல்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கரைச்சி பிரதேச அவை முற்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் ஆட்சி எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினை கு.சிவஞானசுந்தரம் ஆற்றவுள்ளார்.

அத்தோடு பிற்பகல் 5.20 மணிக்கு கலந்துரையாடலும் 5.30 மணிக்கு கேள்விக்கு என்ன விடை ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (9)

## அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுங்கள்



(குருமன்காடு)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள உயிலங்குளம் ஐம்பது வீட்டுத்திட்டத்தில் வசித்து வரும் குடும்பங்கள் குடிநீர் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த மாதிரி குடியிருப்பு திட்டத்தில் குடிநீருக்காக அமைக்கப்பட்ட கிணறுகள் நீரின்றிக் காணப்படுகின்றன.

அத்தோடு, குடியிருப்பு வீதிகள் பயணிக்கக் கூடிய வகையில் இல்லை என்றும் மின்சார வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே கிராமத்தில் நிலவும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி




## பணியாளர்களுக்கு விரைவில் நியமனம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள பதவி வெற்றிடங்கள் விரை வில் நிரப்பப்படவுள்ளதாக தவி சாளர் நா.வை.குகராசா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஆயுர்வேத மருந்து கலவையாளர், வாகன சாரதிகள், நூலக உதவியாளர், தொழிலாளர்கள் போன்றவர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இவ்வெற்றிடங்களை நிரப்புவதற் கான நேர்முகத் தேர்வுகள், கடந்த திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்கள் இடம் பெற்றுள்ளன.

தெரிவு செய்யப்படவுள்ள பணியாளர்களுக்கான நியமனங்கள் விரை வில் வழங்கப்பட்டு பிரதேச சபையின் சேவையை மேலும் விஸ்தரிக்கவுள்ளதாகவும் தவிசாளர் மெலும் தெரிவித்தார். (9-254)

## 20 மில்லியன் செலவில் முத்தையன்கட்டு ஏற்று நீர்ப்பாசன புனர்நிர்மாண பணிகள்

முத்தையன்கட்டுக் குளத்தில் இருந்து ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலம் வித்தியாபுரம் விவசாயக் குடியிருப்புக்கு நீர் விநியோகிப்பதற்கான புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

20 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீட்டிலான இத்திட்டப் பணிகளை வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று முன்தினம் புதன்கிழமை அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்துள்ளார்.

போரின் காரணமாக இப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர நேரிட்டதால்பயிர்ச் செய்கை கைவிடப்பட்டது.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளவும் தத்தமது காணிகளில் 'குடியேறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு முனைப்புக் காட்டி வருகின்றனர்.

இவர்களில் வித்தியாபுரம் பகுதி விவசாயிகள் 1985 ஆம் ஆண்டே இடம்பெயர நேரிட்டதால், இப்பகு தியில் நீர் விநியோகக் கட்டுமானங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன.

இவற்றை வித்தியாபுரம் விவசாயிகள் அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்துப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



புனர்நிர்மாணப் பணிகளுக்கு 20 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுஇந்நிதி வடமாகாண விசேட மீண்டெழும் நிதியூட்டத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்புத் திட்டத்தின் மூலம் 35 குடும்பங்களுக்கு ரிய 105 ஏக்கர் விவசாய நிலமும முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான நாலரை ஏக்கர் வ்வசாயப் பண்ணையும் பாசன வசதி பெறவுள்ளன.

மேலும், முத்தையன்கட்டில் உள்ள தட்டையன் மலைக் குளத்தைப் புனரமைப்பது தொடர்பாகவும் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. பன்னெடுங்காலமாகப் பராமரிப்பின்றிக் காணப்படும் இக் குளத்தின் அணைக்கட்டுகளும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளும் காடு மண்டிக் காணப்படுகிறது.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தக் கண்காட்சி இம்முறை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் அளவில் முத்தையன்கட்டிலேயே இடம்பெறவுள்ளது. இதனால், இதற்கு முன்னதாக வித்தியாபுரம் ஏற்று நீர்ப்பா சனத்திட்டப் புனர்நிர்மாணப் பணிகளையும், தட்டையன்மலைக் குளப் புனரமைப்புப் பணிகளையும் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (9-6)

## கண்காட்சி

(கிளிநொச்சி)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் ஆடை வடிவமைத்தலும் அழகுக் கலையும் என்ற பொருளிலான கண்காட்சி ஒன்று இன்று காலை 10 மணிக்கு ஜெயந்தி நகரிலுள்ள மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்திலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கிராம அபிவிருத்தி திணை க்களத்தின் பணிப்பாளர் ஜே.ஜே.பெலி சியன், சிறப்பு விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட செயலகத்தின் திட்ட மிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கௌரவ விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரி இ.பரராஜசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது, பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கப் படவுள்ளது. (9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர் ஒருவர் ரி.ஐ.டியினரால் கைது

யாழ்.கரவெட்டி வளர்மதி கிழக்கு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பயங்கரவாத குற்ற தடுப்புப் பிரிவினரால் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தல் குற்றச்சாட்டு ஒன்றின் விசாரணைக்காக்வே மேற்படி குடுபஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் தற்போது யாழிலுள்ள ரி.ஐ.டியினரின் அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந் நிலையில் குறித்த நபர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதாக கரவெட்டிப் பிரதேசத்தில் நேற்று பதற்ற நிலைமையொன்று உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-4)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# தென்னாபிரிக்காவின் ஆதரவுடன் இலங்கைக்கு சர்வதேச பொறி

### வசந்தபண்டார கூறுகிறார்

(கொழும்பு)

**தென்னாபிரிக்காவின் தலையீட்டுடனான சர்வதேச பொறியில் சிக்க வேண்டாம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது. அந்த பொறியில் காலடி எடுத்து வைத்தால் இலங்கை, புதிய தமிழீழ திட்டத்தின் பொறியில் சிக்கிவிடக் கூடும் என அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது குறித்து கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் செயலாளர் மருத்துவர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தை அடிப்படையாக கொண்ட ஈழத் திட்டம் மூன்று தசாப்தங்களாக நீண்டு சென்றது. ஆயுதம் மூலமான பாகம் தோல்வியடைந்த பின்னர் அவர்கள் அந்த திட்டத்தை விலக்கி கொண்டனர்.

எனினும் தற்போதைய புதிய திட்டத்தின் கீழ் அவர்கள் அமைதி, இராஜதந்திரம், நேரடியான சர்வதேச தலையீடுகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

யுத்தம் நடைபெற்ற காலத்திலும் இதனை ஒரு வகையில் மேற்கொண்டனர். அன்று ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் நோர்வே நாட்டின் எரிக் சொல்ஹெய்ம் அதற்காக பயன்படுத்தப்பட்டார்.

எரிக் சொல்ஹெய்ம் இன்றும் இந்த பயணத்தில் திரையின் பின்னால் இருந்து செயற்பட்டு வருகிறார். ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் இருந்து கொண்டு இதனை செயற்படுத்தி வருகிறார்.

இதற்கு பின்னால் மேலும் பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. தயான் ஜயதிலக்கவும் அப்படியான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் இருக்கின்றார்.

அன்று எரிக் சொல்ஹெய்ம் மேற்கொண்ட தலையீட்டை இன்று மேற்கொள்ள தென்னாபிரிக்கா அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளனர்.

போரையும் குண்டு வெடிப்புகளையும் காட்டியே அன்று சொல்ஹெய்ம் வருவதற்கான பாதையை ஏற்படுத்தினர். அவரை காட்டியே அன்று சர்வதேச தலையீட்டுக்கான பாதையை அமைத்தனர்.



மக்களை பீதிக்கு உள்ளாக்கி, எப்படியாவது நாட்டில் சமாதான சூழலை ஏற்படுத்த வேண்டும் எனற நிலைப்பாட்டை சொல்ஹெய்ம் உறுதிப்படுத்திக் காட்டினார்.

மோதலில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பை ஒரு மேசைக்கு கொண்டு வந்து அவர்களை பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவது அவசியம் என்ற நிலைப்பாட்டை உருவாக்கி சர்வதேச தலையீட்டை அன்று நியாயப்படுத்தினர் எனவும் வசந்த பண்டார மேலும் கூறியுள்ளார். (2)

## மதவிவகாரங்களை விசாரணை செய்ய விசேட பொலிஸ்குழு

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



இலங்கையில் மதங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய விசேட பொலிஸ் குழு அமைக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றைய தினம் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை சந்தித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மத விவகாரங்கள் அமைச்சின் கீழ் இந்த பொலிஸ் குழு செயற்படும்.இதேவேளை சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் பொலிஸ் அலகுகள் போன்று குறித்த பொலிஸ் பிரிவும் செயற்பட வேண்டும்.

நாட்டில் எந்தவொரு நபருக்கோ நிறுவனத்திற்கோ சட்டத்தை கையிலெடுக்க அனுமதி அளிக்கப்படாது.

தேர்தல் ஒன்றுக்குச் செல்ல அவசரம் இல்லை. எனினும் எதிர்க் கட்சிகள் முறையாக கோரிக்கை விடுத்தால் அடுத்து ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தத் தயார் என்றார். (2)

## கைப்பணி கிராமங்கள் அங்குரார்ப்பண நிகழ்வு

மாத்தளை ரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள உணவெருவ ஆலவட்டக் (சேசத்) கைப்பணிக் கிராமம் மற்றும் பகலஹப்புவித்த மெருகெண்ணை பூச்சு (லாக்ஷா) கிராமம் என்பவற்றை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வுகள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இன்று 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் முறையே இடம்பெறவுள்ளதாக அவ்வமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இவ் அங்குரார்ப்பண நிகழ் வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து கொள்வதுடன் பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் ரிக்கிரி கொப்பேகடுவ, மத்தியமாகாணத்துக்கான விளையாட்டு, இளைஞர் விவகார, பெணகள் விவகார மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பிரேமித பண்டார, அமைச்சின் கருத்திட்டப்பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க, தேசிய அரு ங்கலைகள் பேரவைத்தலைவர் புத்தி கீர்த்திசேன, தேசிய வடிவமைப்பு நிலைய தலைவர் மார்ஷல் ஜனதா, துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கடந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செல வுத்திட்ட முன்மொழிவுகளில் குறிப்பிட்டதற்கிணங்க மஹிந்த சிந்தனை எதிர் காலத் தொலைநோக்குக்கு அமைவாக இவ்வமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் 27 கைவினைக் கைப்பணிக் கிராமங்களின் ஊடாக பல்வேறு கைவினை கைப்பணித் துறைகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி நல்லதம்பி வியாழம்மா

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் நோர்வே Oslo ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி வியாழம்மா கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Alfasel Crematorium, Nedre Kalbakkvei 99, 1081 Oslo, Norway என்னும் முகவரியில் நடைபெறும்.



### ஜோசப் நெவின்ஸ் குணராஜா

யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் நெவின்ஸ் குணராஜா கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### தவனேசன் நிருபன்

சுன்னாகம் சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவனேசன் நிருபன் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று அகாலமரணமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சுன்னாகம் சூராவத்தையில் உள்ளஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தம்பிப்பிள்ளை பூபாலசுந்தரம்

அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பூபாலசுந்தரம் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### குமாரசாமி கணேசவடிவேல்

வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் சென்னை போரூரை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கணேசவடிவேல் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி)கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு மின்சார இடுகாடு,ஆற்காடு ரோடு, போரூர், சென்னை என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பொன்னுத்துரை சந்திரமணி

பருத்தித்துறை புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Scarbrough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சந்திரமணி கடந்த 21 ஆம் திகதி திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave,Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சற்குணேஸ்வரன் புஸ்பலீலா

தொண்டைமானாறு மயிலியதனையைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு,லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணேஸ்வரன் புஸ்பலீலா கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு The Co-operative Funeralcare, 50 Whitta Rd, London, Manor Park E12 5DA,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்டபக்ஷ
# மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்-25.04.2014





### அருளாசிச் செய்தி



ஆதிபராசக்தியான அம்பிகை சுதுமலை எனும் புண்ணியப் பதியிலே ஸ்ரீ புவனேஸ்வரித் தாயாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள். அந்த அருள் மிகு அம்பிகைக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். எல்லாம் வல்ல தாயான அம்பாள் இந்தச் சுதுமலை வாழும் தமது அடியவர்களை சகல சௌபாக்கியமும் தந்து வாழவைக்கும் அருள் தன்மை சொல்லில் அடங்காது.

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாமே என்பதற்கிணங்க இன்றைய கும்பாபிஷேக நாளில் எல்லோருக்கும் அருளை அள்ளி வழங்கி அருள்பாலிக்க வேண்டுமென பாதகமலம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். ஜய வருஷ சித்திரைப் புத்தாண்டு பிறந்து அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் கும்பாபிஷேகம் நிகழ்வது உள்ளத்துக்கு நிறைவைத் தருகின்றது.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்புற எமது நல்லாசிகள். இப்பெருஞ்சாந்தியைக் காணும் பேறு பெற்றவர்கள் பெரும்பாக்கிய சாலிகள். இந்த அம்பிகையின் அருட் கடாட்சம் எங்கும் பல்கிப் பெருக வேண்டி வாழ்த்துகின்றோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

**ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீன குரு முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

### மூர்த்தி, தலம், தீர்த்தம் சிறப்புமிகு பழைமை வாய்ந்த ஆலயம்

யாழ்ப்பாண நகரின் வடபால் 4 மைல் தூரத்தில் உள்ளது சுதுமலை. இதனை சுதுவையம்பதி சுதுவை நகர், சுதுகிரி என்றும் அழைப்பதுண்டு. குளம் சூழ்ந்த வயல்களும் வான் பயிர்களும் செய் பயிர்களும் வேம்பு, அரசு, ஆல், மகிழ், மருது, கடம்பு போன்ற சோலை விருட்சங்களும் இக்கிராமத்தை அழகுபடுத் துகின் றன. இக்கிராமத்தின் மையத்திலே ஆகம விதிகளுக்கமைய கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், இராஜகோபுரம் ஆகியவற்றுடன் புவனேஸ்வரி அம்மை அருள்பாலித்து வருகின்றாள். இவ்வாலயத்தைச் சூழ சிவன் கோவில், முருகன் கோவில், வைரவர் ஆகியனவும் அமைந்து அருள் செய்கின்றன. பழைமைவாய்ந்த இந்த ஆலயம் 1775 ஆம் ஆண்டு மண்ணால் கட்டப்பட்டதாகவும் 1822 ஆம் ஆண்டு கல்லால் கட்டப்பட்டது எனவும் யாழ்ப்பாண கச்சேரிப் பதிவுகள் கூறுகின்றன. இக்காலத்தில் இவ்வாலயம் பர்வதவர்த்தனி அம்மன் கோவில் என்று அழைக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. கண்ணகித் தெய்வம் மதுரை மாநகரை அழித்துவிட்டு அவ்வேகத்துடன் ஈழம்நோக்கி நவாலிகளுவோடை ஊடாக இங்குவந்த தங்கியதாகவும் கருதப்படுகிறது. இதனால் தங்குசங்களை எனவும் அழைக்கப்படுகிறது.

கண்ணகி வழிபாட்டை போற்றி கண்ணகிக்கு விழா எடுத்து வரும் சமயம் அவ்வூர் அன்பரான கதிர்காமர் வேலாயுதர் எனும் அடியவர் தனது வயலில் உச்சி வேளையில் உழுது கொண்டு நிற்கும் சமயம் பால்போல் நிறமுள்ள நரைத்த மயிர், தொள தொள உடல், வெண்ணிற ஆடை அணிந்தவராக மூதாட்டி ஒருவர் சோலைகள் நடுவே நிற்பதை அவதானித்தார். உழுது கொண்டு நின்றவர் அம்மூதாட்டியிடம் சென்றார். அம் மூதாட்டி தனக்கு தாகம் அதிகம் எனவும் குடிப்பதற்கு நீர் தேவை எனவும் கூறினார். சிறிது நேரம் தங்கும்படி கூறிவிட்டு தனது வீட்டிற்கு சென்று இளநீருடன் வந்து பார்த்தபோது மூதாட்டியை காணவில்லை.

எங்கும் தேடிக்காணாது மனம் சோர்ந்தார். அன்றிரவே அம்பாள் காட்சி கொடுத்து என்னை இவ்விடத்தில் வைத்து ஆதரிக்கும்படி ஆஞ்சையிட்டு மறைந்தருளினார். அம்பாள் தோற்றமளித்த இடத்தில் அம்பாளை வழிபட்டு வைகாசி மாதத்தில் பொங்கல், குளிர்த்தி, சுளகு மடைபடையல் வைத்து தேவி வழிபாடு செய்து வந்தனர். அம்பிகை யின் திருவருளால் 1999 ஆம் ஆண்டுபுனருத்தாரணம் செய்யப்பட்டு அரு மையான குடமுழுக்கை நிறைவேற்றினர். ஒவ்வொருவருடமும் நன்கு திட்ட மிட்ட திருப்பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வாறு முழுமை பெற்ற ஆலயமாக உருவாக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தாலும் பெரும்பகுதி புதுப் பொலிவுடன் மஹா கும்பாபிஷேகத்தை நடத்துகின்றனர்.

**தொகுப்பு வி.கிரிதரன்.**

### உற்சவ நாயகி பிரதிஷ்டைக் குருமணியின் ஆசிச் செய்தி



பழைமையும் பெருமையும் கொண்டு சக்தி பீடத்தில் ஸ்ரீ புவனேஸ்வரி மூர்த்தமாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு மஹாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவது மட்டற்ற மகிழ்ச்சியாகும்.

நவ (ஒன்பது) யாகங்களும் ஒன்பது அக்கினி குண்டங்கள் மூலமூர்த்திற்கு அமைக்கப்பட்டுக் கண்கவரும் அழகிய சுவர்ண யாகசாலையும் நிர்மாணிக்கப்பட்டு வெகு சிறப்பாக கும்பாபிஷேகம் நிகழ்வது ஆனந்தமாக இருக்கின்றது. எமது அம்பாள் ஆலய அனைத்து அடியார்களுக்கும் நிறைந்த வாழ்வும் லக்சுமி கடாட்சமும் சந்தோஷமான வாழ்வும் கும்பாபிஷேக பலன்கள் கிடைக்கப்பெற்று மேன்மேலும் பல தெய்வீக கைங்கரியங்களும் நிகழ வேண்டுமெனஅம்பாள் பாதம் பணிந்து ஆசி கூறுகின்றேன். மங்களானி பவந்து

தேவி அலங்கார விபுஷண விசாரதா சிவஸ்ரீ ச. சர்வேஸ்வரக் குருக்கள் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் , சுதுமலை .

### செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை




வரலாற்றுப் பெருமை மிக்க சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் மஹா கும்பாபிஷேகம் காண இருப்பதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மானிப்பாய், சுதுமலை, இணுவில், தாவடி போன்ற அனைத்து கிராமங்களினதும் கண்கண்ட குலதெய்வமாக விளங்கும் அம்பாள் சுதுமலை புவனேஸ்வரி அம்பாளே. மஹோற்சவ காலங்களில் இக்கிராம மக்கள் அனைவருமே அம்பாள் ஆலயத்தில் அகமகிழ்ந்து கூடி வழிபடுவர். வைகாசி பூரணை தினத்திற்கு முதல்நாள் நடைபெறும் இரதோற்சவக் காட்சி அற்புதம் மிக்கது. அடியார்கள் வீதியெங்கும் சுளகுமடை வைத்து தேரேறிவரும் அம்பாளை நன்றியோடு வரவேற்பர். நாலூர் மக்களும் அரோகரா அரோகரா என ஆர்ப்பரிக்க அழகிய சித்திரத்தேரில் அம்பாள் பவனி வருவாள். அம்பாளின் அருளாட்சியால் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தன் முதுமையிலும் தளராது முறைப்படி வேதபாராயணம் பண்ணும் அழகே தனித்துவமானது தெய்வீகமானது.

அம்பாளின் அருளால் சுதுமலை மக்கள் பார்போற்றும் கல்விமான்களாகவும் பல்துறை விற்பன்னர்களாகவும் அன்று தொட்டு அகிலமெங்கும் புகழ்பரப்பி வாழ்கின்றனர். புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் புவனேஸ்வரி அம்பாளைப் போற்றியே தம் பணி ஆற்றுகின்றனர். மஹோற்சவ காலங்களில் அம்பாளைத் தரிசிக்க ஓடோடி வருகின்றனர். சக்தி கடாட்சத்துடனேயே சுதுமலை மக்கள் தங்கள் நாளாந்த கடமைகளைச் செய்வர். புகழ்பூத்த கல்விமான்கள், பரம்பரை வைத்தியர்கள் இந்த மண்ணில் அன்று தொட்டு வாழ்ந்து வந்தமைக்கு அம்பாளின் கடாட்சமே காரணம்.

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

எம்மையெல்லாம் காத்தருளும் அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்து இந்நாட்டு மக்கள் வாழ்வு சிறக்க அம்பாளை வேண்டிப் பணிகிறேன். அம்பாள் ஆலயத்தின் புனருத்தாரண பணிகளை பயபக்தியோடு மேற்கொண்ட அடியவர்கள், அவர்களை வழிப்படுத்திய ஆன்மீக தொண்டர்கள், ஆலய அறங்காவலர்கள், பெரும் மதிப்பார்ந்த பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் அம்பாள் அருள் நிறைவாகக் கிட்டுமெனக்கூறி அம்பிகையைப் பணிந்து அமைகிறேன்.

ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை



விட்டது. முதலில் ஒரு சிறிய கொட்டகையுடன் அவள் தங்கிய இட மான ஆலமரத்தின்கீழ் தொடக்கப்பட்ட ஆலயம் இன்று இவ்வளவு பிரமாண்டமான ஆலயமாக எழுந்து எமது கிராம மக்களின் நம்பிக்கை காரணமாக கோவில் வளர்ச்சி கண்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக நமது இளைஞர்கள் தாமாக வந்து பல தொண்டு களை செய்வதை பாக்கக் கூடியதாக இருக்கிறது. இது அவர்களு க்கு அம்பாள் கடந்த காலத்தில் காட்டிய அருளும் வருங்காலத்தில் நிகழ்காலத்தில் ...டிய ...ங்க... எல்லாம் காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கையே. நாம் இந்த ஆலயத்தை புனரமைக்க தொடங்கிய போது நமது கிராமத்து மக்கள் கிடைக்கப்பெற்ற ஆதரவும் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே பண உதவிகள் மட்டுமல்ல தமது தொண்டுகள் ஆற்றி கிராம மக்கள் மட்டுமல்ல உள்நாட்டவர் மட்டுமல்ல வெளிநாட் டிலுள்ளவர்களும் காட்டிய அக்கறை என்ன என்று சொல்வது.

இனிவரும் காலங்களிலும் அம்பாளின் வளர்ச்சியில் எமது கிராமத்து மக்களின் ஒத்துழைப்பும் பண உதவியும் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

அம்பாளின் வளர்ச்சி எமது கிராமத்தின் வளர்ச்சி.

பே.வாதவூரர், உப தலைவர், தர்மகர்த்தா சபை

**அம்பிகை அடியார்கள் இத்தெய்வீக திருநாளில் வருகை தந்து அம்பிகையின் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும். அனைவரும் வருக! அம்பிகையின் அருள் பெறுக!**

**தர்மகர்த்தா சபையினர், சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வளரி அம்பாள் தேவஸ்தானம்.**

மலரமைப்பு:- வி.கிரிதரன்

PC SYSTEMS
Total It Solution Providers
- Printing
- Photocopy (Colour/ Black & Wight)
- Binding
- Lamination
- Computer Repairing
- Net Call & Local Call
- Stationary
- Children Games
- Cable T.V
- Browsing
- Skype
- Recharges
- Sim
- Bill Payment
- E-mail
- Scanning
- Fax
- Typing
Tel : 021 225 5445
Fax : 021 225 6261
Alady Junction
Manipay

சுந்தர்சன்
பிரதான வீதி,
மானிப்பாய்.

SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை
- உள்நாட்டு. வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து விட்ட காலம் திரும்ப வராது
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிழையாக ஓடுகின்ற கடிகாரத்தை விட ஓடாத மணிக்கூடு எவ்வளவோ மேல்!

கடிகாரம் என்றால் அது சரியான நேரத்தைக் காட்டவேண்டும். ஒரு கடிகாரம் பிழையாக ஓடுமாக இருந்தால் அதனால் ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும். சில வேளைகளில் நல்ல சந்தர்ப்பங்களையும் இழக்க வேண்டி வரலாம்.

ஏனெனில் பிழையாக ஓடுகின்ற மணிக்கூடு ஏதோ தான் இயங்குவது போலக் காட்டிக் கொள்ளுமே தவிர, சரியான நேரத்தை ஒரு போதும் காட்டமாட்டாது.

தான் இயங்குவது போலவும் காட்டி, நேரத்தையும் பிழையாகக் காட்டுகின்ற மணிக்கூட்டால் ஆபத்துத்தான் நேரும்.

ஆனால் ஓடாத மணிக் கூட்டால் எந்த ஆபத்துமில்லை. தான் இயங்க வில்லை என்பதை அந்தக் கடிகாரம் வெளிப்படுத்தி நிற்பதுடன் ஒரு குறித்த நேரத்தை மட்டுமே காட்டி நிற்கும்.

ஆக, ஏதோ ஒரு கட்டத்தில் ஓடாத மணிக்கூடு காட்டி நிற்கின்ற நேரமும் சரியான நேரமும் ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

அதாவது இருபத்தினான்கு மணி நேரத்தில் காலை, மாலை என்ற பிரிப்பில் இயங்காத மணிக்கூடு இருதடவைகள் சரியான நேரத்தைக் காட்டி நிற்கும்.

ஆனால் பிழையாக ஓடுகின்ற மணிக்கூடு ஒரு போதும் சரியான நேரத்தைக் காட்டாது– காட்டவும் முடியாது.

எனவேதான் பிழையாக ஓடுகின்ற கடிகாரத்தை விட ஓடாத மணிக்கூடு எவ்வளவோ மேல் என்றோம்.

இப்போது மணிக்கூடு பற்றிய உதாரணம் எதற்கானது என்று நீங்கள் கேட்கவே செய்வீர்கள். அப்படியான வினாவிற்கு எல்லாம் எங்கள் நிர்வாகம் தொடர்பானது என்பதே பதிலாகும்.

ஆம், வடபுலத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்த போது பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி அமைப்புகளை நாங்கள் கைப்பற்றினால் அபிவிருத்திப் பணிகளை வேகமாக முன்னெடுக்க முடியும். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்; சர்வதேசம் எங்களை அங்கீகரிப்பதற்கான நல்ல சந்தர்ப்பம் என்றெல்லாம் கூறப்பட்டது.

மக்களும் அதனை ஏற்றுக் கொண்டு தங்களின் வாக்குகளை வாரி வழங்கி உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றச் செய்து, தங்கள் பணியைச் சிறப்பாக நிறைவேற்றி முடித்தனர்.

ஆனால் வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகள் சிலவற்றின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது, ஐயா! இதைவிட முன்பு போல் செயலாளர்களின் பொறுப்பில் உள்ளூராட்சி அமைப்புகள் இயங்குவது திறம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

அதாவது மக்கள் ஆட்சி என்ற மணிக்கூட்டை பொருத்திவிட, அந்த மணிக்கூடு பிழையாக ஓடுகிறது.

இதைவிட மக்களாட்சி என்ற மணிக்கூடு இயங்காமல் இருந்தால்; செயலாளர், பணியாளர்கள் என்றளவிலாவது ஏதோ பணிகள் நடந்திருக்குமல்லவா? இதைத்தான் பிழையாக ஓடும் கடிகாரத்தைவிட ஓடாத மணிக்கூடு எவ்வளவோ மேல் என்றோம்.

# வட மாகாண பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு ஆரம்பம்

## –அவைத் தலைவர் சீ.வீ.கே

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் வாழும் மக்களின் நன்மை கருதி வட மாகாண சபையின் ஏற்பாட்டில் "வட மாகாண பொது மக்கள் முறைப்பாட்டுக் குழு" ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

"வட மாகாண சபையின் 9 உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் குழுவின் முதலாவது அமர்வு கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது.

வட மாகாணத்திற்குட்பட்ட மக்கள் வட மாகாணத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அந்தந்த பிரதேசங்களிலுள்ள மாகாண சபை உறுப்பினர்கள் ஊடாகவோ அல்லது கைதடியில் அமைந்துள்ள வட மாகாண சபை அலுவலகத்திலோ அல்லது பேரவைச் செயலகம், வட மாகாண சபை, ஏ - 9 வீதி, கைதடி என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அறிவிக்கமுடியும்.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் குறித்து மேற்படி குழு பரிசீலனை மேற்கொண்டு தொடர்ந்து அது தொடர்பான மேல் நடவடிக்கைகளில் ஈடுபடும்

பொதுமக்கள் தமக்கு ஏற்பட்ட அநீதிகள், பாரபட்சம், பாதிப்புக்கள் தொடர்பான முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## கண்ணி வெடி வெடித்து இராணுவ வீரர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளாலிப் பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் கண்ணிவெடியொன்று வெடித்ததில் தனது இரண்டு கண்களையும் இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு இடம்பெற்ற இந்த வெடி விபத்தில் மிருசுவில் கேற்பேலி இராணுவ முகாமைச் சேர்ந்த ஏ.ஜி.சமன் குமார (வயது 27) என்ற இராணுவ வீரரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இவர் முதலில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-4,6)

# நாட்டில் சமாதானம் உருவாகும் காலம் கனிந்துள்ளது

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

மத மற்றும் இனவாத மோதல்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை செய்ய போவதாகவும் இதற்காக அமைச்சரவையில் திருத்த யோசனை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொது பல சேனா போன்ற இனவாத, மதவாத அமைப்புகள் மேற்கொண்டு வரும் இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தும் நிலைமை இல்லாமல் செய்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் காலம் வந்துள்ளது.

பிரச்சினை ஒன்று ஏற்படும் போது அதற்கு தீர்வை தேடும் செயற்பாடுகளில் பலவந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவது பௌத்த பிக்குகளின் தரத்திற்கு உகந்ததல்ல.

வல்பத்துவில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் பொது பல சேனா முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் நியாயமானது என்றாலும் இனவாதத்திற்கு இடமளிக்க முடியாது.

பகையுணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு ஜனநாயக விரோத மற்றும் இனவாத மோதல்கள் ஏற்படுத்தும் எந்த அமைப்பாக இருந்தாலும் தான் கொண்டு வரவுள்ள திருத்தச் சட்டமூலத்தில் தண்டனை வழங்க முடியும் எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (2)

# வன்முறையின் பிதாமகன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

## மங்கள சமரவீர எம்.பி.கூறுகின்றார்

(கொழும்பு)

வன்முறை கலாசாரம் மற்றும் மாபியா செயற்பாடுகளில் பிதாமகன் மகிந்த ராஜபக்ஷ என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையங்களை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

ஆத்திரமடைந்த மக்களே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இதன் மூலம் வன்முறை கலாசாரம் மற்றும் மாபியா செயற்பாடுகளின் பிதாமகன் யார் என்பது முழு உலகத்திற்கும் தெரியவந்துள்ளது.

இந்த வன்முறை கலாசாரம் மற்றும் மாபியாவை முடிவுக்கு கொண்டு வர அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சகல சக்திகளும் நிபந்தனையின்றி ஒரே மேடைக்கு வரவேண்டிய காலம் வந்துள்ளது.

சர்வாதிகார அரசாங்கத்தின் வெள்ளை யானை அபிவிருத்தி செயற்பாடுகளின் உண்மையான முகத்தை நாடாளுமன்றத்திற்கும், நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தவே ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மத்தல மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்தனர் எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது பாக்.விருப்பம்

(லாகூர்)

சார்க் நாடுகள் அமைப்பில் இலங்கை மிக முக்கியமான உறுப்பு நாடு எனவும் இலங்கையுடன் வலுவான மற்றும் நிலையான உறவுகளை கொண்டிருக்க விருப்புவதாகவும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கான இலங்கையின் உயர்தானிகர் எயார் சீப் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண முதலமைச்சர் ஷாபாஸ் ஷெரீப் இடையில் லாகூரில் நடைபெற்ற சந்திப்பில் முதலமைச்சர் இதனை கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையில் நலன்கள் மற்றும் இரு தரப்பு உறவுகளை குறித்து இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கும், இலங்கைக்கும் இடையில் வலுவான நட்புறவான உறவுகள் இருந்து வருவதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

# சதாவதானி ஆண்டு விழா

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 107–வது ஆண்டு நினைவு விழா இன்று பிற்பகல் 5.30 மணிக்கு சதாவதானி அரங்கில் நிலையத் தலைவர் ப.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி கு.இராஜகுலேந்திரன் கலந்து கொள்கிறார்.

நிகழ்வின் சிறப்பு சொற்பொழிவாக சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின், நாவலர் பாரம்பரியத்தில் சதாவதானி என்னும் பொருளில் சொற்பொழிவு இடம் பெறும். தொடர்ந்து இன்றைய சூழலில் எமக்குப் பெரிதும் தேவையானது பழமையின் போற்றலா? புதுமையின் ஏற்றலா? என்னும் தலைப்பில் பரா ரதீஸ் தலைமையில் இளங்கோ கழகம் வழங்கும் சிறப்புப்பட்டி மன்றமும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து குருபூசைத் தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்களுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (எ-10)

### அமைதியின் சொற்கள்

நான்வழங்குவது உங்கள்உள்ளே சென்று அங்குள்ள அழகை அனுபவிப்பதற்கான ஒரு வழியாகும். அந்த அழகை நான் உருவாக்குவதில்லை. அது ஒரு கற்பனை அல்ல. அது ஒரு புத்தகத்திலிருந்து வருவதில்லை. அது எண்ணங்களினால் வருவதில்லை. அதுஏற்கனவே உங்கள்உள்ளே இருக்கிறது.


(பிரேம் ராவத்)




### மாசற்ற மனிதநேயம்

நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்: "எல்லா மக்களும் இறைவன் படைப்புக்களே! அவர்களுக்கிடையில் எக்காரணம் கொண்டும் வேற்றுமை காட்டாமல் அனைவருக்கும் நன்மையே செய்யுங்கள். தனது படைப்புக்களில் இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்கள் அவன் படைப்புகளுக்கு நன்மை செய்யும் நன்மக்களே!" (நூல்: பைஹகி)

# வீ.ரீ.எஸ்.சிவகுருநாதன் வெற்றிக்கிண்ணம்; யாழ்.இந்து-கொழும்பு ஆனந்தா இன்று பலப்பரீட்சை






யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் கொழும்பு ஆனந்தா கல்லூரி அணிக்கும் இடையிலான வீ.ரீ.எஸ். சிவகுருநாதன கிண்ணத்திற்கான மூன்றாவது வருடாந்த நட்புறவு கிரிக்கெட் போட்டி ஆனந்தா கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. இனங்களுக்கிடையே நல்லிணக்கம், நட்புறவு, சகோதரத்துவம் நிலைக்க வேணடும என்ற உயரிய நோக்குடன் இந்தப் போட்டி நடத்தப்படுகின்றது.

ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட இந்த இரண்டு பாடசாலைகளுக்கும் உறவுப் பாலமாக இருந்த ஒருவரின் பெயரில் நட்புறவு கிரிக்கெட் போட்டியை நடத்துவதற்கு இரண்டு பாடசாலைகளினதும் பழைய மாணவர் சங்கங்களும் இணங்கியதன் பலனாக இப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினரின் பூரண அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. அதுமட்டுமல்லாமல் கடந்த வருடத்தைப் போன்றே ஆனந்தாக் கல்லூரி அதிபர் தமிழ் மொழியிலும், இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா சிங்கள மொழியிலும் சிறப்புரைகள் ஆற்றவுள்ளனர்.

முதல் நாள் ஆட்ட முடிவின் பின்னர் விவாத போட்டி நடைபெற இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விவாத போட்டி கிரிக்கெட் போட்டியுடன் ஒவ்வொரு வருடமும் நடை பெறும் எனபது குறிப்பிடத்தக்கது, இரண்டாம் நாள் போட்டி முடிவில் பரிசளிப்பு வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து விருந்தாளிகளின் ஒன்றுகூடலும் இரவுப் போசன விருந்தும் நடைபெறும். இரண்டு கல்லூரிகளுக்கும் இடையில் கடந்த வருடம் நடை பெற்ற வீ.ரீ.எஸ். சிவகுருநாதன் கிண்ண நட்புறவுக் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுக்களால் யாழ்.இந்துக் கல்லூரி வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் யார் வெற்றிபெறுகிறார்கள் என்பதை விட நட்புறவும் சகோதரத்துவமும் வெற்றிபெற்று அது நிலைத்திருக்க வேண்டும் என்பதே பலரதும் பிரார்த்தனை ஆகும். (க-23)







வடமாகாண ஆளுநர அலுவலகததினால நடததபபட்ட மாகாண சதுரங்கபபோட்டி யாழ.இநதுககலலூரி குமாரசாமி மணடபததில நடைபெறறது. இந நிகழவில விருநதினரகள அமரநது இருபபதையும கலவியமைசசர பநதுல குணவரததன, ஆளுநர ஜி.ஏ.சநதிரசிறி ஆகியோர போட்டியை ஆரமபிதது வைபபதையும நிகழவில கலநதுகொணடவரகளையும படஙகளில காணலாம். (படங்கள் :- என்குமார்)

## சங்கானை பிரதேச இளைஞர் கழக

# ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி; சென்.நியூஸ்ரார் இ.கழகம் சம்பியன்





சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சென்.நியூஸ்ரார் இளைஞர் கழகம் சம்பியனாகியது.

சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாளும் பரிசில் வழங்கலும் அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இடம்பெற்ற ஆண்களுக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் சென்.நியூஸ்ரார் இளைஞர் கழகமும் ஜேம்ஸ் இளைஞர் கழகமும் மோதியது.

இப் போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் பெறும் முனைப்போடு எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தன. எனினும் கிடைத்த சந்தர்ப்பங்கள் கோலாக மாற்றப்படாமையால் முதற்பாதி இரு அணிகளும் கோல் பெறாத நிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியிலும் இரு அணிகளும் கோல் பெற கடுமையாக முயற்சித்த போதும் கோலெதுவும் பெறப்படாமையால் போட்டி 0:0 என சம நிலையில் நிறைவுக்கு வந்தது.

இதனால் சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டது. இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திய சென். நியூஸ்ரார் இளைஞர் கழகம் 4 கோல்களைப் போட்ட போதும் பதிலுக்கு ஜேம்ஸ் இளைஞர் கழகம் 3 கோல்களையே பெற்றது.

இதனால் இப் போட்டியில் சென்.நியூஸ்ரார் இளைஞர் கழகம் 4:3 என்னும் கோல் கணக்கில் வெற்றிபெற்று சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் 2014 ஆம் ஆண்டிற்கான சம்பியனாகியது. (க-23)

## அறிஞர் ஐயனார் விளையாட்டுக் கழக கிரிக்கெட் போட்டி

அறிஞர் ஐயனார் விளையாட்டுக் கழகம் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

6 பேர் 5 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக இவை இடம்பெறவுள்ளன.

போட்டிகள் சுன்னாகம் பூதவராயர் ஆலய மைதானத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

வெற்றி பெறும் அணிக்கு பணப்பரிசிலும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஆட்டநாயகன், தொடர் ஆட்ட நாயகன், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த துடுப்பாட்ட வீரன் உள்ளிட்ட விருதுகள் வழங்கப்படவுள்ளன.

பங்குபற்றுவதற்கும் மேலதிக தகவல்களுக்கும் நர்மிதன் 077 57 97 053, சிலோஜன 077 18 98 757, கோகுல் 077 62 72 589 போன்ற தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-23)

# மரதன் ஓட்டப்போட்டி

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இரு தினங்கள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. மரதன் ஓட்டப் போட்டியை வை.இராஜேஸ்வரன் தொடக்கி வைக்கவுள்ளார்.

நிலைய தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவர் சிற்றம்பலம் துரைராசா கலந்து கொள்ளவுள்ளார்.

பரிசளிப்பு விழா நிலையத்தின் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (க-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்' - திருவள்ளுவர்

# எமது சாதனைத் துணைவேந்தரை பாராட்டி வாழ்த்துகின்றோம்

## பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக மீண்டும் நியமனம் பெற்ற சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்களை பல் புகழும் பெற வாழ்த்துகின்றோம்.

மூன்று வருடங்கள் எமது துணைவேந்தராக பணி செய்து பல்வேறு சவால்கள் மத்தியிலும் எமக்கு நிறைவான சேவை செய்த எம் துணைவேந்தரே! பல்துறை அழுத்தங்களினாலும் நலிவுற்றிருந்த எமது பல்கலைக்கழகத்தினை பொலிவு பெறச் செய்து சர்வதேச தரத்திற்கு ஈடாக எமது பல்கலைக்கழகத்தை தரம் உயர்த்தியவரே எம் துணைவேந்தர்.

1. இரவுபகலென்று பாராது நேர வரையறையின்றி தன்னையே அர்ப்பணித்து சேவை செய்தவர்.
2. மதக் கொள்கைகளைத் தொடர்ச்சியாக பின்பற்றி ஆன்மீக உணர்வு நிறைந்தவர் ஆவார்.
3. பல்கலைக்கழக மாணவர்களை மாணவ ஒழுக்கத்தையும், ஆன்மீக நெறிகளையும் வளர்த்தெடுத்து அழியாத கல்விச் செல்வத்தை மாணவ சமூகத்திற்கு ஊட்டவழி செய்தவர்.
4. சொல் வீரர் அல்ல செயல் வீரர்தான் எம் துணைவேந்தர்.
5. பலர் ஆலோசனை கூறினாலும் சரியான ஆலோசனையினை ஏற்று செயற்படுத்துபவர்.
6. ஒவ்வொரு பணியாளர்களின் மனோ நிலையினையும், செயற்திறனையும் அறிந்து அதற்கேற்ப வழிப்படுத்தும் பண்புடையவர்.
7. பல்கலைக்கழக சமூகத்தினரின் சிரிப்பில் திருப்தி காணும் பண்புள்ளவர்.
8. நடுநிலை தவறார், விதிகள் மீறார், சரியென உணர்வதனைத் துணிந்து தீர்மானம் எடுப்பார். எடுத்த தீர்மானத்தை சரிவர உரிய காலத்தில் நடைமுறைப்படுத்துவார். தன்நிலையில் நின்று உணர்ந்து செயற்படுவார், இவற்றின் மூலம் எல்லோர் மத்தியிலும் நன்மதிப்புப் பெற்றவர்.
9. சோதனைக் காலத்திலும் பொறியியல் பீடத்தினை புதிதாக உருவாக்கினார். விவசாய பீடத்தினை மீண்டும் பழைய இடத்திற்கு கொண்டு சென்றார். வணிகத் துறையினை மீண்டும் அறிமுகப்படுத்தினார். MBA பட்டப்படிப்பினை புதிதாக ஆரம்பித்தார், இராமநாதன் நுண்கலைப் பிரிவினை தனி நிறுவனமாக்கினார். பல்கலைக்கழக அடிக்கட்டுமான வசதிகளை அதிகரித்தார். எமது பல்கலைக்கழகத்தின் தரத்தினை தேசிய தரத்திற்கும். சர்வதேச தரத்திற்கும் ஈடாக உயர்த்தினார்.

சோதனைக் காலத்தில் இவ்வாறான சாதனைகளென்றால் இனி எல்லாமே சாதனைகள்தான்.
தங்கள் சேவை மேலும் உயர்ந்திட எமது வாழ்த்துக்கள்.

முகாமைக் கற்கைகள் வணிக பீட மாணவர்கள் ஒன்றியம் – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(6223)

## இன்றைய போட்டிகள்




# பெங்களூரை வீழ்த்தி இறுதி ஓவரில் கொல்கத்தா திரில் வெற்றி

பரபரப்பான இறுதி ஓவரில் பெங்களூர் அணிக்கெதிரான போட்டியில் கொல்கத்தா 2 ஓட்டங்களால திரில்வெற்றி பெற்றது.

பெங்களூர்- கொல்கத்தா அணிகளுக்கு இடையேயான 11-வது ஐ.பி.எல். லீக் போட்டி சார்ஜாவில் நேற்று இரவு 8 மணிக்கு தொடங்கியது. நாணயச்சுழற்றியில் வென்ற பெங்களூர் அணித்தலைவர் வீராட் கோலி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.



அதன்படி கொல்கத்தா அணிக்கு கலிஸ் - காம்பீர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். காம்பீர் தான் சந்தித்த முதல் பந்திலேயே எல்.பி.டபிள்யூ. ஆகி வெளியேறினார். அடுத்து வந்த மனீஷ் பாண்டே 5 ஓட்டங்களுடன் ஏமாற்றம் அளித்தார்.

3-வது விக்கெட்டுக்கு கலிஸ்டன்-கிறிஸ் லைன் ஜோடி சேர்ந்தார். இருவரும் பெங்களூர் அணியின் பந்து வீச்சை நாலாபுறம் பறக்க விட்டனர். இதனால் ஓட்ட விகிதம் ஜெட்வேகத்தில் உயர்ந்தது.

45 ஓட்டங்களை எடுத்திருந்த லைன், வருண் ஆரோன் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 31 பந்தில் 3 பவுண்டரி, 3 சிக்சருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அப்போது கொல்கத்தா அணி 11.3 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 90 ஓட்டங்களை எடுத்திருந்தது. லைனைத் தொடர்ந்து கலிஸும் 43 ஓட்டங்களை எடுத்து அட்டமிழந்தார்.

அதன்பின் வந்த வீரர்கள் சரியாக ஆடாததால் கொல்கத்தா அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 150 ஓட்டங்களை எடுத்தது.

பெங்களூர் அணி சார்பில் வருண் ஆரொன் 4 ஓவர் வீசி 16 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 151 ஓட்டம் பெற்றால் வெற்றி என களமிறங்கிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் ஏடுத்து 2 ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் லயன் தெரிவானார். (க)



# அறிவித்தல்

## கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) கிளைக்குழுக்களை தெரிவு செய்தல் 27.04.2014 (ஞாயிற்றுக்கிழமை)

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான் 1989-ம் ஆண்டின் 12-ம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். 1983-ம் ஆண்டின் 32-ம் இலக்க கூட்டுறவுச் சட்டங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11-ம் இலக்க கூட்டுறவுச்சங்கங்கள் (திருத்த) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2ஆவது பிரிவின் கீழ் வடக்கு மாகாண ஆளுநரினால் வெளியிடப்பட்ட 08.04.2009ஆம் திகதிய 1596/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாகவும் கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உப விதியின் பிரிவு 22 (2) இற்கு அமைவாகவும் என்னால் உருவாக்கப்பட்டு 10.07.2010ஆம் திகதி வெளியிடப்பட்ட 'பனை தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச்சங்கங்களின் கிளைக்குழுவினை தெரிவு செய்தல்' என்ற ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ்க் குறிப்பிடும் அட்டவணைப்படி நடைபெறுமென சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டம் 27.04.2014 (ஞாயிற்றுக் கிழமை) மு.ப. 10.00 மணி. கூட்டம் நடைபெறும் இடங்கள் மற்றும் தவிசாளரின் பெயர் விபரங்கள்.

| தொ.இல | கிளை இல | கிளைப் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர், |
|---|---|---|---|---|
| 01 | 146 | மடத்துப்புலம் | கலைமகள் ச.ச.நிலையம். இமையாணன் | திரு. அ.விமல்ராஜ் |
| 02 | 147 | கரணவாய் தெற்கு | வள்ளுவர் ச.ச.நிலையம். கரணவாய் | திரு. பொ.மகேஸ்வரன் |
| 03 | 148 | உடுப்பிட்டி | நாவலர் பாலர் பாடசாலை. உடுப்பிட்டி | திரு. அ.தயாளன் |
| 04 | 149 | கம்பர்மலை | கலாவாணி ச.ச.நிலையம். கம்பர்மலை | திரு. வீ.இரத்தினகாந்தன் |
| 05 | 150 | வல்வெட்டி | பராசத்தி ச.ச.நிலையம். மாவடி | திரு. பொ.கோகுலன் |
| 06 | 151 | கரணவாய் வடக்கு | கலைமதி பாலர் பாடசாலை. நவுண்டில் | திரு. E.C.சிறிதரன் |
| 07 | 152 | இமையாணன் | கலைமகள் பாலர் பாடசாலை. இமையாணன் | திரு. த.தவமன்னன் |
| 08 | 153 | கரவெட்டி மேற்கு | திருவள்ளுவர் ச.ச.நிலையம். கரவெட்டி | திரு. ம.விமலன். |
| 09 | 157 | கரவெட்டி வடக்கு | நரசிங்கர் ஆலயம். தேவரையாளி | திரு. க.கமலநாதன் |
| 10 | 158 | அல்வாய் தெற்கு | பிரதேச சபை உப அலுவலகம் கட்டை வேலி, நூல் நிலையம். அல்வாய் | திரு. க.பிரதீபன் |
| 11 | 159 | மண்டான் | மாவலி படிப்பகம். மண்டான் | திரு. ம.சிவபாலன் |

### முக்கிய அறிவித்தல்

$ இதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட தவிசாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

$ கிளை பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகைமையுடைய உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கினர் அல்லது 25 இதில் எது குறைவானதோ அத்தொகையாகும்.

$ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவிற்கான 9 உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இதில் இருவர் 18 – 35 வயதிற்குட்பட்டவராயும், ஒருவர் மகளிர்குழு உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

$ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 9 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.

$ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளருக்கு சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் தவிசாளர் திருவுளச் சீட்டின் மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

$ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
857, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஒப்பம் - கு.அருந்தவநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசிட் அருந்திய...

ணொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட 50 ஆவது நாளான நேற்று முன் தினம்இரவு பிரஸ்தாப நபர்அசிட் அருந்தியுள்ளார்.

இந்நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மனைவியான வசீகரன் கீர்த்திகா திருமணமாகி 20 ஆவது நாள் யாழ்.இணுவில் பகுதிலுள்ள வீட்டில் சேலையில் சுருக்கிட்டு தற்கொலைசெய்து கொண்டநிலையில் சடலமாக மீட்கப்பட் டிருந்தார்.

இதேவேளை குறித்த பெண்ணின் தற் கொலைக்கு காரணமானவர் என்ற குற்றச் சாட்டின் பேரில் பொலிஸாரினால் வசீகரன் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

அதேவேளை மனைவி இறந்த தினத் திலிருந்து ஒவ்வொரு நாளும் மது போதை யில் திரிந்ததாகவும் இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு உரும்பிராயிலுள்ள உறவின ரின் வீட்டில் அசிட் அருந்திய நிலையில சோர்வுற்று மயங்கிய நிலையில காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை அசிட் அருந்திய வேளை மது போதையில் தான் வசீகரன் இருந்தார் என்று யாழ்.போதனாவைத்தியசாலையில் இடம்பெற்ற மரண விசாரணையின் போது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மனைவி இறந்த சோகத்தை அவரால் தாங்கி கொள்ளமுடியவில்லை எனவும் இதன் காரணமாகவே அவர் அசிட் அருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்றும் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

உயிரிழந்தவரின்சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் தற்கொலை மரணங்களும் அவலச் சாவுகளும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## வீதியில் சென்ற...

இந்துக் கல்லூரிக்கு அருகில் கடந்த கடந்த 17ஆம் திகதி வியாழக்கிழமை இரவு "தமிழீழம் மலரும்" என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரம் ஒட்டிய குற்றச்சாட்டில் யாழ்.கொக்குவில் பகுதியினைச் சேர்ந்த ஜெயதாஸன் கஜானன் (வயது 24), இணுவில் பகுதியினைச் சேர்ந்த மன்மத ராசா வேணுகாந்தன் (வயது 24) ஆகிய இருவரும் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து இவர்கள் இருவரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அந்த இளைஞர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகினறன. இதனைத் தொடர்ந்து, "கணினி வலைப்பின்னல்" என்னும் நிலையத்தை நடத்திய விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியான கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இராஜரட்ணம் சுதர்சன் (வயது 30) என்பவர் வெள்ளிக் கிழமை (18) கைது செய்யப்பட்டார். இவ்விரு சம்பவங்களை அடுத்து, பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்நிலையிலேயேவீதியில்கொப்பிகளு டன் நின்றிருந்த மாணவர்களிடமும் படையினர் விசாரணைகளை நடத்தியுள்ளனர் (எ-4)

## படைக்குறைப்பு...

இருந்து படையினரை மீளப்பெற மாட்டோம் என்பதை உறுதியாகவும் இறுதியாகவும் ஏற்கெனவே தெரிவித்துவிட்டோம். படையினரை மீளப்பெறுவது என்ற பேச்சுக்கே இனி இடமில்லை. வடக்கிலிருந்து அண்மைக் காலத்தில் எழுபது மினி முகாம்கள் மற்றும் படைநிலைகள் அகற்றப்பட்டு விட்டன. அதற்கு மேலும் படைக்குறைப்பு என்ற பேச்சுக்கு இடமேதுமில்லை. சாதாரண பாதுகாப்புக்குப் படைநிலைகள் அவசியம்.

ஏனைய பிரதேசங்களில் எப்படிப் படையினர் நிலை கொண்டுள்ளனரோ அது போலவே வடக்குக் கிழக்கிலும் படையினர் நிலை கொண்டுள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் அங்கிருப்பர். அங்கு படையினரை நிரந்தரமாக வைத்திருப்பது என்பது ஏற்கெனவே தீர்க்கமாக எடுக்கப்பட்டு திட்டவட்டமாக அறிவிக்கப்பட்ட விடயம்.

இதை முன்னெடுப்பதற்காக புலி மீளெழுச்சி என்ற கதைகளை அவிழ்த்துவிடத் தேவையில்லை. நாம் 13 ஆயிரத்துக்கும் அதிகமான விடுதலைப் புலிகளை புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைத்திருக்கிறோம். ஏற்கெனவே பல சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன. அதைப் பற்றிய தகவல்களில் புனைகதை எதுவுமில்லை.

காணாமல் போனோர் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவும் இத்தகைய நடவடிக்கையின் ஒரு பகுதியே. காணாமல் போனோர் என்று கூறப்படுவோர் பலர் வெளிநாட்டில் இருப்பதாக தெரிய வருகின்றது. இது தொடர்பில் எல்லாம் நாம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இது தொடர்பில் எல்லாம் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் கண்டுபிடிக்கப்படும். அதற்கு சர்வதேச விசாரணை தேவையில்லை. அத்தகைய சர்வதேச விசாரணையில் எமக்கு நம்பிக்கையுமில்லை. அது எமது இறைமையில் தலையிடும் செயல். அதற்கு அனுமதிக்கவோ இணங்கவோ முடியாது.

பொது பலசேனா சட்டத்தைக் கையிலெடுத்துள்ளதா என்று நீங்கள் கேட்கின்றீர்கள். அப்படி எவரும் சட்டத்தை கையிலெடுக்க அனுமதிக்கப்படமாட்டாது. இவ்வாறு மத விவகாரங்களை ஒட்டி எழுந்துள்ள நெருக்கடிகளைக் கையாள்வதற்கான விசேட பொலிஸ் பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளோம். அப்பிரிவு இந்தப் பிரச்சினைகளைக் கையாண்டு, ஒழுங்கை நிலைநாட்டும். தற்போது எழுந்துள்ள மதரீதியான நெருக்கடிகள் குறித்து எல்லா மதத் தலைவர்களையும் அழைத்து நான் பேசவிருக்கிறேன். அதன் மூலம் சுமூக நிலை உருவாக்கப்படும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசுவதற்குப் பொருத்தமான இடம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுதான். எட்டப்படக்கூடிய எந்தத் தீர்வையும் சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு தான் உள்ளது. ஆகவே அதனுடன் பேசி, இணக்கம் காணுவதே பொருத்தமானது. எனவே அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சு நடத்துவதாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## துணைவேந்தராக...

விக்னேஷ்வரன் 13 வாக்குகளையும் பெற்றுள்ளனர்

இவ்வாறு போட்டியிட்டவர்களில் அதி கூடிய வாக்குகளை பெற்ற மூவரின் பெயர்களை பல்கலைக்கழக பேரவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கும்.

மானியங்கள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அறிவித்தது இதில் மீண்டும் பேராசிரியர் வசந்தி அரச ரட்ணத்தை ஜனாதிபதி நேற்றைய தினம் தெரிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது. (எ-11)

## யாழ்.- மன்னார்...

டம் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளனர்.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயர்கள் இருவரும் சர்வதேச சமூகத்திடம் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் மூலம் இலங்கையை அவர்கள் காட்டிக கொடுப்பதாக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலபொட அத்தே ஞானசார தேரர் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவம் பல்லாயிரக் கணக் கான மக்களை இனப்படுகொலை செய்ததாகக் கூறி, அவர்கள் இருவரும் தேசத்துரோகக் குற்றத்தை செய்ததாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (எ-11)

## பயங்கரவாத நடவடிக்...

தத்தை மீண்டும் தோற்றுவிக்கும் திட்டம்மற்றும்ஏனைய பயங்கரவாத செயல்களுக்கு நிதியுதவிகளை உட்பட அனுசரணைகளை வழங்கி வந்ததாக கூறி சில அமைப்புகள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் தடை செய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டமை குறித்து அமைச்சர், வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் விளக்கி கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றன.

இதனடிப்படையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கு அமைய 16 அமைப்புகள் தடை செய்யப்பட்டதுடன் 424 தனி நபர்கள் தடை செய்யப்பட்டோர் பட்டிலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 65 பேர் கைது செய்யப்பட்டதுடன்19 பேர்விடுதலை செய்யப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தமை மற்றும் ஆவணங்கள் ரீதியான ஆதாரங்கள் குறித்து கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார். (எ-11)


**Granton Group Sri Lanka. VACANCY**

எமது Granton Group Companyக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும், ஆர்வமும் தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர் யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

20 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* மேற்பார்வையாளர் * முகாமைத்துவப் பயிற்சியாளர்
* களஞ்சிய மேற்பார்வையாளர் * சந்தைப்படுத்துனர்கள்.

ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
* வயதெல்லை 18-35 * தங்குமிட வசதி இலவசம்
* அனுபவம் அவசியமற்றது.

(6218)

தொடர்புகளுக்கு : 0774458134, 0779994807

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE
FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af Alliance Française de Jaffna

திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர். யாழில; AF 1976 முதல் இயங்கிவருகிறது.

* உலகில் FRENCH கற்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கிகரிக்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் கிளைநிறுவனங்களைக் கொண்டு உலகப் புகழ் பெற்ற நிறுவனமாக FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்றது. உயர் தகைமையுடைய பல ஆசிரியர்களைக் கொண்ட ஒரே சர்வதேச நிறுவனம் எமதே.
* வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) இங்கு படிக்கிறார்கள்.
* Certificates & International Diplomas(DELF A1,A2)

புதிய வகுப்புகள் 26.04.2014 8.30 am இன்றே பதிவுசெய்யுங்கள்
வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்...
61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
(இவ்வீதியில் கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

**வெல்டர் (ஓட்டுனர்) தேவை)**

கேற், கிறில் செய்யக்கூடிய திறமையான வெல்டர் தேவை.

தொடர்புகளுக்கு : 0775407448

(C-7158)

**வேலைவாய்ப்பு**

எமது நிறுவனத்திற்கான
* Distributor * Supervisor
* Assistant Manager
* Manager * Administration

போன்ற மேற்தரப்பட்ட பதவிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளன.
* கல்வி தகைமை - O/L, A/L, * தங்குமிடவசதி இலவசம். * சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

(6220)

தொடர்பு: 0777009820, 0771908997

**NEC**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

A/L 2016 கலை, வர்த்தக,தொழில்நுட்ப
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
26-04-2014 சனி காலை 9.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படுகின்றது.

3வது வருட நிறைவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில்!
**CCTV CAMERA**

Dome IR - Rs. 5500.00 CCD - 600TVLINE
Bullet IR - Rs. 6500.00 CCD - 600TVLINE
Bullet IR - Rs. 7800.00 CCD - 700TVLINE

4Ch Package Rs 67,500 Only
4Ch AVTECH DVR
500GB HDD
4 IR Bullet CCD Camera
19" Moniter
Free Installation

- இணையத்தளம், கைத்தொலைபேசி மூலம் கண்காணிக்கும் வசதி.
- ஒரு வருட உத்தரவாதம்
- விற்பனைக்கு பிந்திய சேவைகள். மேலதிக விபரங்களுக்கு 075 9997798

(C-7148)

HOTLINE 021 5 676767
aj SYSTEMS
Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner
AJ SYSTEMS | (PVT) LTD
இல. 315,1/2 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Tel : 0212219234 Email: info@aj-sys.lk Web: www.aj-sys.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... யாழ்ப்பாணம் ... உள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org